


# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 424



# ஊடகவியலாளர்கள் 44பேர் அரச பயங்கரவாதத்தால் படுகொலை

## – மறுக்கப்பட்ட நீதி –

A. Adaikalanathan

C.V. Wigneswaran

# தமிழரசுக் கட்சியையும் பிளவுபடுத்தி சுமந்திரன் வெளியேறுவார்? (சிறப்பு நேர்காணல்)

# 'Operation Trust' - நாடு கடந்த தமிழீழ அரசைக் கவிழ்க்கத் திட்டம்

# தமிழரசுக் கட்சியையும் பிளவுபடுத்தி சுமந்திரன் வெளியேறுவார் என்பது மக்கள் கருத்து. உண்மைதானா?

**தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**



**கேள்வி : இன்றைய அரசியல் நிலவரங்களுக்கிடையில் தமிழரசுக் கட்சியின் அடுத்தகட்ட செயற்பாடுகள் மற்றும் பிளவுகள். சுமந்திரன் அல்லது சிறிதரன் தான் கட்சியின் அடுத்த தலைவர். நீங்கள் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக போட்டியிடப்போவதில்லை என பலதரப்பட்ட கேள்விகள் எழுந்துள்ளன. இவ் விடயம் குறித்து கட்சியின் தலைவர் என்கிற வகையில் உங்களது கருத்து?**

பதில் : நீங்கள் பலதரப்பட்ட கேள்விகளைக் கேட்டுள்ளீர்கள். தற்போது தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் எங்களது கட்சியின் 17வது மகாநாடு அடுத்த வருடத்தின் தை மாதமளவில் நடைபெறவுள்ளது. ஆகையால் எங்களது முயற்சிகள் அதனது உறுப்பினர்களைத் திரட்டுதல், தொகுதிக் கிளை, மாவட்டக் கிளைகளை அமைத்தல், பொதுக்குழுவுக்கான பிரதி நிதிகளைத் தெரிவுசெய்து மகாநாட்டில் நிறைவேற்றவேண்டிய தீர்மானங்கள் சம்பந்தமாக தொகுதிக் கிளைகள் தான் ஆரம்பத்தில் பிரேரணைகளை முன்வைக்க வேண்டியவர்களாக இருப்பார்கள். அவர்களிடத்திலும் பேச்சுக்களை நடாத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஓரிரு வாரத்தில் எங்களுடைய அமைப்பு வேலைகள் நிறைவுபெற்றுவிடும். மூலக் கிளைகள், தொகுதிக் கிளைகள், பொதுக் குழுவுக்கான பிரதிநிதிகள், மகாநாட்டிற்கான தீர்மானங்கள் தொடர்பிலான ஆய்வுகள், பேச்சுவார்த்தைகள் வடக்கு, கிழக்கு, கொழும்பு உட்பட அந்த முயற்சிகள் தான் தற்போதுநடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இப்போதுஅரசினைப்பொறுத்தவரை பாரிய பொருளாதார நெருக்கடிக்குப் பின்னால் இதிலிருந்து மீளுவதற்கான நடவடிக்கைகளில் செயற்படுகிறார்கள். அதில் எவ்வளவு தூரம் வெற்றியடைவார்கள் என்பதைக் கணிக்க முடியாது. கடந்த வருடம் தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அரசியல் சம்பந்தமானப் பிரச்சினைகள் தொடர்பில், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தி அந்தப் பேச்சுவார்த்தையை தொடர்வேன் என அறிவித்தவர் இதுவரையிலும் அந்தப் பேச்சுக்கள் மீளத் தொடங்கப்படவில்லை. அது எங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஏமாற்றமாக இருக்கிறது. ஜனாதிபதி அவர்கள் பொருளாதார ரீதியாக நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில் சர்வதேச ரீதியாக பல உதவிகளைப் பெற்றிருக்கின்றார். கடன்கள் தீர்க்கப்படுவதற்கு சில உதவிகளைப் பெற்றிருக்கின்றார். கடன்களைப் பெற்று பொருளாதார ரீதியாக ஓரளவு மீட்சியைப் பெற்றிருக்கின்றாரே தவிர, கடன்களைப் பெற்றதால் கடனை மீளச்செலுத்துவதற்கான வருமானம் வரக்கூடியதாகவோ நாட்டில் எந்தவித முன்னேற்றத்தையும் நாங்கள் நிச்சயிக்க முடியாமல் இருக்கிறது.

தற்போது வரவுசெலவுத் திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் அந்த வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்படும் என நாங்கள் நம்பலாம். ஆனால் அந்த வரவுசெலவுத் திட்டம் அடுத்த ஆண்டில் எவ்வளவு தூரத்திற்கு வருமானத்தையும், நன்மைகளையும், கடனைத் தீர்க்கக்கூடியதாகவும், மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேறக் கூடியதாகவும் இருக்கும் என்பதை அடுத்த ஆண்டில் நிச்சயிக்கக்கூடியதாக இருக்கும். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கானத் தீர்வு விடயத்தில் எந்தவித நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தற்போது ஜனாதிபதி ஆயத்தமாக இல்லை.

**கேள்வி : தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு சி.வி.கே சிவஞானம் அவர்கள் சுமந்திரன் அவர்களைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. நீங்கள் போட்டியிடாமைக்கான காரணம் என்ன?**

பதில் : இது கேள்விக்குறிய விடயங்கள் அல்ல. ஒரு அரசியல் கட்சியில் குறிப்பாக தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் 1949ஆம் ஆண்டுகளில் தந்தை செல்வநாயகம் கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். அதற்குப் பின்னர் வன்னியர்சிங்கம் அவர்கள் கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் இராஜவரோதயம் தெரிவு செய்யப்பட்டார். நாகநாதன் தெரிவானார். கிழக்கிலங்கையின் இராசமாணிக்கம் மூன்று முறை தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இது தமிழரசுக் கட்சியின் பாரம்பரியம். ஒவ்வொரு காலத்திலும் பலர் தலைவராக தெரிவானார்கள். நான் மூன்று முறை தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றேன். கடந்த காலங்களில், நாங்கள் அடுத்த தலைமுறைக்கு தலைமைப் பொறுப்பை ஒழுங்குசெய்யவேண்டும் எனக் குறிப்பிட்டேன். ஆகையால் அடுத்த மகாநாட்டில் நீங்கள் இன்னொருவரை தலைவராகத்தெரிவுசெய்ய ஆயத்தமாகுங்கள் என நான் அறிவித்திருக்கின்றேன்.

நாங்கள் வடக்கிலும் கிழக்கிலும் தலைவர் மற்றும் செயலாளர் பொறுப்புக்களை வழங்கி எங்களது கட்சியினை நடாத்தி வந்திருக்கின்றோம். தற்போது நான் போட்டியிடக்கூடாது என்றில்லை. இந்த பாரம்பரியத்தினைப் பின்பற்றி நான் விண்ணப்பிக்கவில்லை. தலைவராக பொறுப்பேற்பதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை. கட்சியில் தலைவர் செயலாளர் நிர்வாகத் துறையினர் தெரிவு செய்யப்பட்டால் நான் அவர்களுக்கு சிறந்த ஆதரவினை வழங்கி, தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது நிர்வாகம், கட்சியின் கொள்கை, மகாநாட்டில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு ஆதரவாகவும் இருப்பேன் என்கிற பாரம்பரியத்தை பின்பற்றுவேன் என நிச்சயமாக நம்புகின்றேன்.

**கேள்வி : தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த மூன்று கட்சிகளும் பிளவடைந்து நிற்கின்றன. மாவை சேனாதிராஜா அவர்கள் இருந்தால் மீண்டும் ஒன்றிணைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது. சுமந்திரன் அல்லது சிறிதரன் தலைமையின் கீழ் பிரிந்து நிற்கின்ற கட்சிகள் மீண்டும் ஒன்றிணைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றும். கருத்து முரண்பாடுகள் பாரியளவில் உருவெடுத்துள்ள சூழலில். மீண்டும் கூட்டணியாக இம்மூன்று கட்சிகளும் பயணிக்க சிறந்த தலைமைத்துவம் அமையும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில் : நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல மூன்று முறை நீண்டகாலமாக தலைவராக இருந்துள்ளேன். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில் தமிழ்த்தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளாகிய நாங்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து வேலைசெய்த காலத்திலிருந்து தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் கட்சி ஆரம்பத்தில் இல்லை பின்னர் இணைக்கப்பட்டவர்கள், ரெலோ இயக்கம் என ஒரு கொள்கையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் செயற்பட்டு வந்திருக்கின்றோம். கடந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலின் போது ஒரு உத்தி முன்வைக்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாகத் தேர்தல் கேட்கின்றபோது வாக்குகளினால் வெற்றிபெறக் கூடிய சுயேட்சைக் குழுக்களோ அல்லது ஏனைய கட்சிகளோ இல்லாமல் எங்களுடைய கட்சியில் உள்ளவர்களே தனித்தனியாகவும் சுயேட்சைகளுக்கு ஆதரவாகவும் போட்டியிட்டால் கூடுதலான ஆசனங்களைப் பெறலாம் என்கிற ஒரு உத்தி கையாளப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில் நான் அதனை விரும்பவில்லை, ஏற்கவுமில்லை. எங்களது கட்சியின் பெரும்பாலானவர்கள் அவ்வாறு நாங்கள் செய்வோம். ஒரு புதிய முறை புதிய அனுபவம் என்கிற ரீதியில் நானும் ஒத்துழைத்தேன். ஆனால் எதிர்பாராதவிதமாக அந்தத் தேர்தல் நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. தேர்தல் நடந்திருந்தால் அதனது அனுபவத்தையும் நாங்கள் சுவைத்துப் பார்த்திருக்கலாம்.

இருந்தபோதிலும், நாங்கள் ஒரு இலட்சியத்திற்காக கொள்கைக்காக இந்த நாட்டில் அரசியல் தீர்வுக்காக அந்த இலக்கைக்கொண்டு செயற்பட்டவர்கள். நாங்கள் பிளவுபட்டுப்போவோம் என்பதில் எனக்கு மிகுந்த அச்சமாக இருந்தது. இதனை நான் கூறியும் இருக்கிறேன். ஆனால் அந்தத் தேர்தல் நடக்காமல் போய்விட்டது. அவ்வாறான நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாதுவிட்டாலும் இப்போது அதனது விளைவு தமிழரசுக் கட்சி தனியாகவும் ஏனைய கட்சிகள் ஒருமித்தும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் மிகத் தெளிவாக கொண்டிருக்கின்ற கருத்து, தமிழ்த்தேசியக் கட்சிகளாகிய நாங்கள் பெரும்பாலும் கொள்கையில் ஒற்றுமையாக இருக்கின்றோம். அதன்படி செயற்பட்டும் வருகின்றோம். அதாவது சுயநிர்ணய அடிப்படையில் சமஸ்டிக் கட்டமைப்பில் ஒரு அரசியல் தீர்வினை நாங்கள் ஏற்கவேண்டும் என்றுதான் தமிழ்த்தேசியக் கொள்கையில் நிற்கும் கட்சிகள் செயற்படுகின்றார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாங்கள் அரசுடனோ அல்லது சர்வதேசத்திற்கு முன்னாலோ அல்லது மனித உரிமைப் பேரவையின் முன்னாலோ தீர்மானங்களை முன்வைக்கின்றபோது அல்லது ஆதரித்து நிற்கின்றபோது இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற சந்தர்ப்பங்களிலும் நாங்கள் அந்தக் கொள்கையைப் பின்பற்றி ஒரே முனைப்பில் செயற்பட்டு வருவது ஓரளவுக்கு ஆறுதலாக இருக்கின்றது. எமது இனத்தின் விடுதலைக்காக அவ்வாறே நாங்கள் ஒற்றுமைப்பட்டு செயற்படுவோம் என்பதையும் எதிர்காலத்தில். நான் கட்சியின் தலைவராக இல்லாவிட்டாலும் இக்கட்சிகளினுடைய கொள்கைகளில் நாம் இதுவரை பயணித்து வந்த கோட்பாடுகளில் இருந்து தடம் மாறாமல் எமது தமிழ்த்தேசிய மக்களின் விடுதலைக்காக தொடர்ந்தும் நான் ஆதரவாக செயற்படுவேன் என்பதில் நம்பிக்கையுடன் இருக்கின்றேன்.

**கேள்வி : வடக்கு மாகாண சபைக்கானத் தேர்தலில் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை அடையாளங்காட்டி வெற்றி பெற வைத்தீர்கள். முதலமைச்சரும் ஆனார். பின்னர் தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறி தனக்கென ஒரு கட்சியையும் ஆரம்பித்து DTNA என்கிற கூட்டணியில் தனக்கு தலைமைத்துவம் கிடைக்கவில்லை என்று வெளியேறினார். இன்று அந்தக் கூட்டணியும் என்னவானது என்பது தெரியவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் தான் தமிழ்க் கட்சிகள் பிளவடையக் காரணம் என்று செய்திகள் வெளிவந்தன. கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்களே கூறினார்கள். பல குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டன. ஆனால் தலைவர் என்கிற ரீதியில் நீங்கள் இவருக்கெதிரான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்கிற குற்றச்சாட்டு உங்கள் மீதும் சுமத்தப்படுகிறதே. இது பற்றி?**

பதில் : தமிழ்த்தேசியத்தின் அடிப்படையிலான கட்சிகள் ஒற்றுமையாக இருந்தபோது திரு.சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை முதல்வராகக் கொண்டுவந்தோம். உண்மையில் அப்போது மாவை சேனாதிராஜா தான் மாகாண சபையின் முதல்வராக வரவேண்டும் என்று தீர்மானித்தார்கள். எனினும் கல்வியாளர், நீதியரசர், புதியவர்களை உள்வாங்கவேண்டும் கட்சிக்குள் என்கிற அடிப்படையில் ஏனையவர்கள் ஆதரிக்காவிட்டாலும் நான் தான் சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் கலந்துரையாடி கட்சிக்குள் இணைத்துக்கொண்டோம். அவர் முதல்வராக வந்ததன் பின்னர் அங்கே ஏற்பட்ட பிரச்சினைகள் அல்லது கருத்து முரண்பாடுகள் காரணமாக சில குழப்பங்கள் வந்தது உண்மை தான். அது மாகாண சபையினைப் பொறுத்தவிடயம்.

ஆனால் கட்சியினது தலைமையைப் பொறுத்தவரையில் கட்சிகள் பிளவுபட்டு நிற்கின்ற சந்தர்ப்பத்திலும் நாங்கள் ஒற்றுமைக்காக முயற்சித்திருக்கின்றோம். நான் முன்னர் கூறியதைப்போல தமிழ்த் தேசியத்தின் பால் நிற்கின்றோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தனியாக நின்றபோதிலும் மிகப் பெரும்பாலான விடயங்களில் கொள்கை அடிப்படையில் தமிழினத்தின் விடுதலைக்கு எந்த அடிப்படையில் தீர்வு வேண்டும் என்ற விடயத்தில் நாங்கள் ஒன்றுபட்டு நின்றிருக்கின்றோம்.

தொடரும்...

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## பிளவடைந்துள்ள தமிழ்க் கட்சிகளும், நெருங்கும் தேர்தலும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் பயணித்த தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய கட்சிகள் இன்று சுக்குநூறாக சிதைவடைந்து போயுள்ளன. இதில் பலர் ஆளுக்கொரு கட்சியினை உருவாக்கியுள்ளனர். தமிழினத்தின் விடுதலைக்காக, அரசியல் கட்டமைப்பாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், விடுதலைப் புலிகளின் மௌனிப்பின் பின்னர், பிளவடைந்தனர். இக்கூட்டமைப்பின் தலைவராகச் செயற்பட்ட இரா. சம்பந்தன் அவர்களால் இக்கூட்டணியை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள இயலவில்லை. தமிழரசுக் கட்சியின் மீதான குற்றச்சாட்டுக்கள் சரிமாரியாக எழுந்த நிலையில், அங்கத்துவம் வகித்த கட்சிகள் பிளவடைந்து போயின.

புளொட் மற்றும் ரெலோ கட்சியினரும் தமிழரசுக் கட்சியின் மீதான அதிருப்தி காரணமாக "தாமரை இலைமேல் நீர் போல" செயற்படுகின்றனர். அரசின் பக்கம் சார்ந்திருக்கும் தமிழ்ப் பிரதிநிதிகளையும் கட்சிகளையும் தவிர்த்துவிடுவோம். ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக கட்சிகள் இன்னமும் ஒற்றுமை என்கிற குடையின் கீழ் வர மறுக்கின்றனர். உட்கட்சி மோதலகளால் முரண்பட்டு நிற்கின்ற இவர்கள், மீண்டும் விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற விருட்சத்தின் கீழ் வருவது எப்போது? இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற பெயர் மறைந்துபோகும் அளவிற்கு நிலைமை சென்றுள்ளது.

எதிர்வரும்ஆண்டுதேர்தலுக்கானது. இதனை ஜனாதிபதியே உறுதிப்படுத்தியிருக்கின்ற சூழலில், இனியாவது பழையனவற்றை மறந்து ஒற்றுமையுடன் செயற்பட இவர்கள் முன்வரவேண்டும். அரச கைக்கூலிகளாக வடக்கு மற்றும் கிழக்கில் வலம் வருபவர்களை மக்கள் எதிர்வரும் காலங்களில் ஓரங்கட்டவேண்டும்.

ஏற்கனவே மாகாண சபைகளுக்கானத் தேர்தல் நடத்தப்படாமல் வருடக்கணக்கில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் மாகாண சபையின் பொறுப்புக்கள் ஆளுநர் வசம் உள்ளது. தமிழ் மக்களுக்கென நல்ல வாய்ப்பாக அமைந்த மாகாண சபையில் செய்யப்படவேண்டிய பல விடயங்கள் இருந்தும் ஒழுங்காக எதுவும் கடந்த காலங்களில் செய்யப்படவில்லை. மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது எதிர்கால அரசியல் வளர்ச்சியைக் குறிவைத்தார்களே தவிர, தமிழ் மக்களது நலனில் அக்கறை காட்டவில்லை. மாகாண சபையைப் பயன்படுத்தி தமது அரசியலை வளர்த்துள்ளனர் என்பது உண்மை.


உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலும் பொருளாதார நெருக்கடியினைக் காரணங்காட்டி, நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழறுபடிகளால் கிடப்பில் போடப்பட்டுள்ளது. கிராமங்களது வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுகின்ற போது, தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை என்பது மிகவும் அவசியம்.

மாகாண சபைத் தேர்தல் எதிர்காலத்தில் நடைபெறுகின்றபோது தமிழ்க் கட்சிகள் பழையதையே பேசிக்கொண்டிருப்பது காலத்திற்குப் பொருந்தாது. தமிழர்கள் பல பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் கோரி வீதிகளில் இன்றும் காத்துக்கிடக்கின்றனர். தமிழ்க் கட்சிகள் தேவையான விடயங்களை முன்னெடுக்காமல், சுயநலப்போக்கில் பயணிப்பது தமிழினத்தின் விடுதலைக்கு ஆபத்தாக அமையும்.



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

# கல்லறைப் பூக்கள்



23

கடலின் மீது அலைக் கூட்டம் பாய்ந்தெழும் போது, மீனினங்கள் கூட்டமாக மேலெழுந்து கீழே விழும். சூழலைச் சுத்தப்படுத்திக்கொண்டிருக்கும் தோட்டிகள் இடையிடையே மனிதர்களின் கரங்களிலிருந்து பணிசைப் பறித்துக்கொண்டு மாயாஜால வித்தைக் காட்டும்.

பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவர்கள் ஒரு பக்கம் கூட்டம் கூட்டமாகவும் மாணவிகள் இன்னுமொரு பக்கம் கூட்டம் கூட்டமாகவும் அறிமுகமானவர்களுடனும் அறி முகம் இல்லாதவர்களுடனும் இரகசியமாகவும் அம்பலமாகவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கின்றனர்.

பொது பயணிகள் பிறிதொரு பக்கம் கூடுகின்றனர். வியாபாரிகள் பலர் பல வியாபாரங்களுக்காக ஆங்காங்கு இராணுவத்திற்கும் பொலிஷா ருக்கும் பயந்து வியாபாரத்திற்குத் தடைசெய்யப்பட்ட பகுதிகளில் ஒளிந்து திரிகின்றனர். வியாபாரிகள், கப்பல் பயணிகளைஒவ்வொருவராக சந்தித்து தங்களது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். யாரோ ஓரிரு முதலாளிகள் சொகுசாக வாழ, ஒரு தலைமுறையை அழிக்க, முகவர்களின் மூலம் பொருளாதார நெருக்கடிகளைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் மூசாக்கள் புத்திசாலித்தனமானவர்கள் என்று கூறுவதை விட தங்கள் இனத்திற்கு புதைகுழி தோண்டும் அடிவருடிகள் என்றே கூறவேண்டும்.

"எல்லோரும் வரிசையாக வாங்கோ. 'டோக்கன்' எடுக்காதவர்கள் எடுத்துக்கொள்ளுங்கள்" – மாவட்டச் செயலகத்தின் காவலாளி வாயிற் கதவை திறந்தான்.

வாயிற் காவலனின் இந்த அறிவுறுத்தலை கேட்டதும், பயணிகள் எல்லோரும் வளைவு பாதையினூடாக புகையிரதம் எவ்வாறு வளைந்து செல்லுமோ அவ்வாறே வளைந்து வளைந்து வரிசையாக நின்றனர். மாவட்டச் செயலகத்தைச் சுற்றி இரவிலிருந்து பாதி தூங்கியும் தூங்காமலும் 'டோக்கனுக்கு' காத்திருந்தவர்கள் மத்தியிலும் அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் செல் வாக்கைப் பயன்படுத்தியவர்கள் மத்தியிலும் நூறு நபர்களைக் கொண்ட அந்த வரிசையில் நாற்பத்தி மூன்றாவது நபராக கரங்களில் மண் நிறமான இறப்பர் கோப்பின் உள்ளே பத்து பதினைந்து மடலகளுடன், சட்டைப் பையில் 'ரெனொல்ட்' பேனையுடனும் (மேலே முக்கால் பகுதி வெள்ளை நிறமும் கீழே கால் பகுதி நீல நிறமும் கடும் நீல நிறத்திலான மூடியைக்கொண்டது) சாத் நின்றான்.

ஒருவருக்கு வரவேற்பு பகுதியில் பதிவை மேற்கொள்ள ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுக்கின்றது. பின்னர் 'கவுண்டரில் டிக்கட்' காசு கட்டி பற்றுச் சீட்டுப் பெற்று, அலுவலகத்தின் உள்ளே 'டிக்கட்டுக்கு' பதிவை மேற்கொள்ள பத்து நிமிடம் எடுக்கின்றது.

கிட்டத்தட்ட ஒருவர் இரகசிய பொலி ஷாரின் விசாரணையையும் பதிவுகளை யெல்லாம் முடித்து, வெளியில் வருவதற்கு இருபது நிமிடங்களுக்கு மேல் எடுக்கின்றன. இரகசிய பொலி ஷாரின் அறைக்கு விசாரணைக்குச் சென்ற பயணிகள் முகவரி தெரியாமல் போனவர்கள் பலர். முகவரி அற்று போனவர்களைத் தேடும் உறவுகள் பலர். சிலர் என்ன காரணம் என்று தெரியாமலேயே முகவரி அற்றும் மரணித்தும் போயுள்ளார்கள்.

பத்தாவது நபர் இப்போது உள்ளே செல்கின்றார். வரிசையில் நின்றவர்கள் ஒருவரை ஒருவர் தங்களுக்குள் தாங்களே அறிமுகப்படுத்திக் கொண்டு, சுவாரஸ்சியமாகவும் தத்துவார்த்தமாகவும் கதைத்துக் கொண்டதுடன், சிலர் அதற்குள்ளும் வீண் பழிகளுக்கும் காட்டிக்கொடுப்புக்களுக்கும் கைதுகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

ஒரு பக்கம் அரசாங்கத்தின் தொந்தரவு இன்னுமொரு பக்கம் தமிழர்களின் இயக்கங்களின் தொந்தரவு. எல்லாவற்றுக்கும் எல்லாப் பக்கமும் பாதிப்படைவது சாமானிய அப்பாவி மக்களே இதற்கு விதிவிலக்கல்ல. சாத்தின் தங்குமிட கடிதத்தின் சமாச்சாரம். இவ்வாறு எத்தனை அப்பாவிகள் இந் மண்ணில் ஒன்றும் அறியாமல் மாண்டுப் போயிருப்பார்கள். இதற்கு எல்லாம் காரணம் மனிதனின் சுயநலப்போக்கே.

பலர் வரிசையில் நின்றாலும் சாத்துக்கு முன்னால், நின்ற புதிய நண்பர்களான வின்சனும் முரளியும் அவனுக்கு முதல் முதன் பல்கலைக்கழக நண்பர் களானார்கள். தங்குமிடத்திற்கு கடிதம் வாங்க சென்ற போது, ஒரு மாணவியின் நட்பு கிடைத்தும் திடீர் காதலாகவும் பாலியல் உணர்வு சார்ந்த தூண்டுதலாகவும் சாத்திடம் மாறி, திலகா (மாணவியின் பெயர்) பிற்காலத்தில் பேருந்தில் பயணிக்கும் போது, அவளிடம் தவறான செயற்பாட்டில் ஈடுபட்டு, அவளை மௌனிக்க வைத்துவிட்டான்.

"எங்க ஊர்?" – வின்சன்
"வன்னி"

சாத்தின் மீது சற்று நம்பிக்கைபிறந்தது, வின்சனுக்கு. சீருடையினருக்கு பயந்து செயற்பட்டான் வின்சன். 'தன்னுடைய தம்பியின் விடயம் யாருக்கும் தெரிய வந்து தனது கல்விக்கும் தனது உயிருக்கும் ஆபத்து வந்து விடுமோ' என்று வின்சனுக்கு மனப் பயம் வாட்டுவது எங்கே சாத்துக்குத் தெரிய போகிறது. இருவம் வாழ்ந்த சூழலில் சிறிய சிறிய வேறுபாடுகள்தான், காணப்பட்டன.

சாத் வாழ்ந்த ஊரான மாங்குளமும் வன்னிதான். இராணுவக் கட்டுப்பாடு அற்ற பகுதி. வின்சன் வாழ்ந்த வவுனியாவும் வன்னிதான். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி. சாத் எந்த பக்கமும் சாய்ந்த சிந்தனை உடையவன் அல்ல. வின்சன் தமிழ்த்தேசியத்தின் மீது சாய்ந்த சிந்தனையுடன், பிரிவினையின் ஊற்று. இவற்றை இருவருமே வெளிப்படையாக அப்போது அறிந்திருக்க சாத்தியம் இல்லை.

"என்ன பெயர்?"
"சாத்"
"எந்த 'பெக்கல்டி'?
"மெடிசின்"
"பொருளாதாரத் தடைக்குள்ள இருந்து படிச்சு வந்திட்டாய். Good"
"என்ன பெயர்?"
"வின்னசன்"
"இரவு இஞ்ச எங்க தங்கி நிண்டனீங்கள்?"
"பக்கத்தில் நிலா லொட்ஜில். அப்பா அங்க இரவு புள்ளா நுளம்புத் தொல்லையோட, ஆமித் தொல்லை வேறு"
"நீர் இண்டைக்கா வந்தது?"
"இல்லை...இல்லை நேற்று"
"அப்ப தங்குறகு"
"பக்கத்தில் ஒரு வீட்டில்"
"பரவாயில்லை"
"நீர் என்ன பீடம்?"
"கலைப்பீடம். 'லிங்குஸ்டிக்' பாடம்"
"நாலு வருஷம் தொடர்ச்சியாக, 'ஸ்பெஷல்' படிக்கிறதா?"
"வீட்டு நிலைப்பாடு, நாட்டு நிலைப்பாடு ரெண்டும் படு மோசமாக இருக்கு. மூன்று வருஷம் 'ஜெனரலோடு' போவம். முதல் இப்பத்தைய காலத்திற்கு அடிப்படையாக வேலை ஒன்று தேவை. தம்பி, தங்கச்சி எல்லாம் படிக்குதுகள்"

"நீர் சொல்வதும் சரிதான், ஆனாலும் காலம் கிடைக்கேக்கப் படிச்சிக்கோனும். எங்களுக்கு மிஞ்சின சொத்து கல்வி ஒன்றுதானே"

"சரி சரி பார்ப்போம். முதல்ல இப்பத்தைய வேலையைப்பார்ப்போம்."

சாத்துக்கும் வின்சனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை செவிமடுத்த, வின்சனின் நண்பன் முரளி, "சாத் நீர் வன்னியில் எந்த இடம்?" நானும் வன்னிதான், கிளிநொச்சி திருவையாறு" என்று பேச்சை ஆரம்பித்தான். வின்சனைச் சற்று முன்னாள் இழுத்துவிட்டுட்டு, சாத்தின் அருகில் வந்தான்.

"பல வருஷமா மாங்குளந்தான்"
"எங்கட ஊருக்கு பக்கத்தில்"
"இந்த கிழமை எப்படியும் கப்பல் ஏறலாமா?"
"சனம் கூடையா இருக்கு. இரண்டு கப்பல் ஓடுதாம்?. லங்கா முடி கப்பலில் ஆயிரக்கணக்கான பேர் போலாம். 'சிற்றி ஒப் ரிங்கோவில்' நானூற்றி ஐம்பது பேர் போகலாமாம்."
"எந்த கப்பலில் போறது நல்லம்?"
"இரண்டும் நல்லதுதான்.

தொடரும்...

# ஊடகவியலாளர்கள் 44 பேர் அரச பயங்கரவாதத்தால் படுகொலை




உலகின் ஊடகங்கள் பணத்திற்காக உண்மையை மறைக்கின்றன என்றால், தமிழ் அச்சு இலத்திரனியல் ஊடகங்கள் பணத்திற்காக தமிழர்களின் உயிரையும் உரிமைகளையும் பலி கொடுப்பதில் போட்டி போட்டு செயற்படுகின்றன. தமிழரின் அழிவே முதல் குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் சில நாளிதழ்கள் பணத்திற்காக தமிழரின் அழிவை கண்டு கொள்ளாமல் இருக்க பேரம் பேசும் முன்னணி தொலைக்காட்சி வரை இன்று தமிழர் ஊடகம் எதுவும் தமிழர் நலன் சார்ந்து இல்லை.

தமிழர் நலனுக்காகவே ஆரம்பிக்கப்பட்ட சில தமிழ் நாளிதழ்கள் கூட இன்று தமிழர் வாழ்வை விற்று பிழைக்கும் நிறுவனங்களாக மாறிவிட்டன. 2009 ஈழத்தில் நடந்த இனப்படுகொலையை உலகிற்கு கொண்டு செல்லாமல் மறைத்ததில் தமிழ் ஊடகங்களின் பங்கு மிகப்பெரியது. பின் 1993ம் ஆண்டு இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் மே 3ம் திகதி உலக ஊடக சுதந்திர தினமாக அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இத்தினத்தில் ஊடக சுதந்திரத்தில் பெரும் பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு யுனெஸ்கோ நிறுவனம் 'கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருது' என்ற விருதை வழங்கி வைக்கிறது. இவ்விருதானது கொலம்பிய பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாஸாவின் நினைவாக வழங்கப்படுகிறது. இவர் 1986 டிசம்பர் 17ம் திகதி தனது அலுவலகம் முன்பாக வைத்து படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஜன நாயகத்துக்கான பத்திரிகை யாளர்களின் கூற்றுப்படி பார்த்தால், இலங்கையில் 44 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் அல்லது காணாமலாக்கப்பட்டிருக்கிறார்கள். இவை தவிர, கைதுகள், தடுத்து வைப்புகள், தாக்குதல்கள், பயமுறுத்தல்கள், மிரட்டல்கள், துன்புறுத்தல்கள், தொல்லைக் கொடுத்தல்கள் போன்றவைகளும் நடந்திருக்கின்றன.

1. பெயர் : ஐயாதுரை நடேசன்
தொழில் : பத்திரிக்கையாளர்
கொலை செய்யப்பட்டது : 31 மே. 2004. மட்டக்களப்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் ஸ்ரீலங்கா தமிழ் மீடியா கூட்டணியின் துணைத்தலைவர். வீரகேசரி செய்தித்தாளில் பத்தி எழுதுபவராகவும் பணி புரிந்தவர்.

2. பெயர் : கந்தசாமி ஐயர் பாலநடராஜா
தொழில் : பத்திரிக்கையாளர்
கொலை செய்யப்பட்டது : 16 ஆகஸ்ட். 2004. கொழும்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் ஈ.பி.டி.பி. அமைப்பின் ஊடக செயலாளராக பணிபுரிந்தவர். அந்த குழுவின் அதிகாரபூர்வ பத்திரிகையான தினமுரசு இதழிலும் இவர் வேலை பார்த்தவர்.

3. பெயர் : லங்கா ஜெயசுந்தெரா
தொழில் : நிழல்பட பத்திரிக்கையாளர்
கொலை செய்யப்பட்டது : 11 டிசம்பர். 2004. கொழும்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் விஜயா செய்தித்தாள்களில் புகைப்பட பத்திரிகையாளராகப் பணிபுரிந்தவர். கொழும்பு நகரின் முன்னாள் குதிரைப்பந்தய திடலில் அமைந்த திறந்தவெளி அரங்கில். நடந்த இசைநிகழ்ச்சியின்போது கை குண்டு வெடிப்பில் இவர் கொல்லப்பட்டார். இந்த தாக்குதலுக்கு இலங்கையின் வலதுசாரி அரசியல் அமைப்பான ஜாதிக்க ஹெல உறுமய அமைப்புடன் நெருங்கிய தொடர்புள்ள ஒரு சிங்கள தீவிரவாத அமைப்பே காரணம் என சந்தேகிக்கப்படுகிறது.

4. பெயர் : தர்மரத்தினம் சிவராம் (தராகி)
தொழில் : பத்திரிக்கையாளர்
கொலை செய்யப்பட்டது : 28 ஏப்ரல். 2005. கொழும்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் தமிழ்நெட் இணைய தளத்தின் மூத்த ஆசிரியர் ஆவார். டெய்லி மிரர். வீரகேசரி போன்ற நாளிதழ்களில் வாரந்தோறும் இவர் பத்திகளை எழுதி வந்தார். ஆயுதம் தாங்கியவர்களால் கொழும்பில் இவர் கடத்தப்பட்டார். மறுநாள் நாடாளுமன்றம் அருகே இவரது உடல் கண்டெடுக்கப்பட்டது. இலங்கை ராணுவ உளவுப்பிரிவினருடன் இணைந்து பணியாற்றும் துணை ராணுவப் படையினரால் திட்டமிட்டு இவர் கொல்லப்பட்டிருக்கிறார். எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு. 'தராகி என்னும் தர்மரத்தினம் சிவராமை மிகத்திறமை வாய்ந்த பத்திரிகையாளர்' என்று வர்ணிக்கிறது. இலங்கையில் நிலவி வந்த ராணுவ. அரசியல் சூழலை எவ்வித சமரசமும் இன்றி இவர் விமர்சித்து எழுதியதால் படுகொலை செய்யப்பட்டார்.

5. பெயர் : கண்ணமுத்து அரசகுமார்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 29 ஜூன். 2005. மடுபொல (கல்முனை-அக்கரைப்பற்று சாலை)
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் கிழக்குப் பிராந்தியத்தின் செய்தித்தாள் முகவராக வேலை செய்தவர். படுகொலைக்கு முன். மட்டக்களப்பு பதிப்பான ஈழநாதம் செய்தித் தாளை விநியோகம் செய்யக்கூடாது என்று இவர் மிரட்டப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

6. பெயர் : ரேலங்கி செல்வராஜா
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 12 ஆகஸ்ட். 2005. கொழும்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். அரசு நடத்தும் மீடியா அமைப்பின் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி வழங்குநராக வேலை பார்த்தவர். கணவருடன் சேர்த்து இவர் கொல்லப்பட்டார். அரசுக்குச் சொந்தமான எஸ்.எல்.பி.சி. நிறுவனத்தில் ஈ.பி.டி.பி. அமைப்பின் நிதியூட்டத்துடன் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இதய வீணை என்ற வானொலி நிகழ்ச்சியை இவர் தயாரித்து வழங்கியவர்.

7. பெயர் : டேவிட் செல்வரட்னம்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 29 ஆகஸ்ட். 2005. கொழும்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் தமிழ் ஆதரவு நாளிதழான சுடர் ஒளி ஏட்டின் பாதுகாவல் அலுவலராக பணிபுரிந்தவர். அடையாளம் தெரியாத சிலரால் நாளிதழ் அலுவலகத்தின் மீது இரண்டு கையெறி குண்டுகள் வீசப்பட்டு நடந்த தாக்குதலின் போது இவர் உயிரிழந்தார்.

8. பெயர் : யோககுமார் கிருஷ்ணப்பிள்ளை
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 30 செப்டம்பர். 2005. மட்டக்களப்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். மட்டக்களப்பு பதிப்பு ஈழநாதம் செய்தித் தாளின் விநியோகஸ்தராக இருந்தவர். பலமுறை தொடர்ச்சியாக மிரட்டப்பட்டவர். இவர் கொல்லப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு. காவல்துறை சிறப்பு அதிரடிப் படையினர். கிழக்கில் உள்ள அதன் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஈழநாதம் செய்தித்தாளின் விற்பனையைத் தடுத்து வைத்திருந்தனர்.

9. பெயர் : எல்.எம். ஃபலீல்
தொழில் : எழுத்தாளர்
கொலை செய்யப்பட்டது : 02 டிசம்பர். 2005. மட்டக்களப்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் டிவிசனல் செயலாளராகப் பணியாற்றியவர். இவரது அலுவலகத்துக்குள் புகுந்து அடையாளம் தெரியாத ஆட்கள் சுட்டதில் இவர் கொல்லப்பட்டார்.

10. பெயர் : கே.நவரட்னம்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 22 டிசம்பர். 2005. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ்ப்பாணத்தில் பகுதி நேரமாக செய்தித்தாள் விநியோகம் செய்தவர். யாழ்ப்பாணப் பதிப்பான தினக்குரல் நாளிதழ்களைச் சேகரிக்கச் சென்றபோது அடையாளம் தெரியாத நபர்களால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

11. பெயர் : சுப்பிரமணியம் சுகிர்தராஜன்
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 24 ஜனவரி. 2006. திருகோணமலை
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். சுடர் ஒளி நாளிதழின் திருகோணமலைச் சிறப்புச் செய்தியாளராக வேலை பார்த்தவர். திருகோணமலையில் 2006. ஜனவரி 2ஆம் திகதி. ஐந்து மாணவர்கள் கொலை செய்யப்பட்டதில் இலங்கை ராணுவத்தின் பங்கு வெட்டவெளிச்சமானது. அதில் இவரது பங்கு முதன்மையானது.

12. பெயர் : எஸ்.டி.கணநாதன்
தொழில் : தமிழ் செய்திகள் மற்றும் தகவல் மையத்தின் புரவலர்
கொலை செய்யப்பட்டது : 01 பெப்ரவரி. 2006. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ்ப்பாணம் அரியாலை பகுதி. மாம்பழம் சந்தியில் உள்ள ராணுவ முகாமுக்கு மிக அருகில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

13. பெயர் : பஸ்தியான் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 03 மே. 2006. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ்ப்பாண நாளேடான உதயன் இதழின் விநியோக மேலாளராக பணிபுரிந்தவர். ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் ஐந்து பேர். உலக பத்திரிகை சுதந்திர நாளன்று ஆயுதங்களுடன் வந்து இவரது அலுவலகத்தைத் தாக்கி கண்மூடித்தனமாக சுட்டதில் இவரும். இன்னொரு ஊழியரும் பலியானார்கள்.

14. பெயர் : ராஜரட்னம் ரஞ்சித்குமார்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 03 மே. 2006. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ்ப்பாண நாளிதழான உதயன் ஏட்டின் விநியோக கண்காணிப்பாளராக இருந்தவர். உலக பத்திரிகை சுதந்திர நாளன்று. ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் ஐந்து பேர். ஆயுதங்களுடன் வந்து இவரது அலுவலகத்தைத் தாக்கி கண்மூடித்தனமாக சுட்டதில் இவரும். இன்னொரு ஊழியரும் பலியானார்கள்.

15. பெயர் : சம்பத் லக்மல் டி சில்வா
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 02 ஜூலை. 2006. கொழும்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். சிங்கள மொழி நாளிதழ்களான இருதின. லக்பிம. சத்தினா போன்ற ஏடுகளில். பாதுகாப்புத்துறை சிறப்புச் செய்தியாளராக. அலுவலக ஊழியராக இன்றி வெளியில் இருந்து வேலை பார்த்தவர். இலங்கை உளவுப்பிரிவின் உறுப்பினர் என்று கருதப்படும் ஒருவரால் இவர் வீட்டில் இருந்து வெளியே அழைக்கப்பட்டு கைத்துப்பாக்கியால் மிக அருகில் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

16. பெயர் : மரியதாசன் மனோஜன்ராஜ்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 27 ஜூலை. 2006. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ் தினக்குரல். வீரகேசரி தமிழ் நாளிதழ்களின் யாழ்ப்பாண விநியோகஸ்தராக இருந்தவர். விநியோகத்துக்காக இவர் செய்தித் தாள்களைச் சேகரிக்கச் சென்றவழியில். கிளேமோர் கண்ணிவெடி வெடித்து உயிரிழந்தார்.

**தொடரும்...**

**ஆகாஸ்**

# 'Operation Trust' - நாடு கடந்த தமிழீழ அரசைக் கவிழ்க்கத் திட்டம்

ஒப்பரேஷன் ட்ரஸ்ட்' என்ற இந்த இராணுவ நடவடிக்கை பற்றி உங்களுக்குத் தெரியவில்லை என்றால், உலக இராணுவ விவகாரங்கள் பற்றிய அறிவு உங்களுக்கு போதாது என்றுதான் கூறவேண்டும். ஒரு நாட்டின் உளவுப் பிரிவு சர்வதேச மட்டத்தில் மேற்கொண்ட மிக முக்கியமானதும், மிகவும் பிரபல்யமானதுமான ஒரு நடவடிக்கைதான் இந்த "Operation Trust" என்ற இராணுவ நடவடிக்கை.

ஒரு தேசத்தின் ஆட்சிக்கு எதிராகப் புலம்பெயர்ந்த அந்த தேசத்து மக்கள் சர்வதேச மட்டத்தில் மேற்கொண்ட ஒரு புரட்சியை மிகவும் வெற்றிகரமாக அடக்கி ஒடுக்கிய ஒரு இராணுவ நடவடிக்கைதான் "Operation Trust. இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது உலக மட்டத்தில் ஒரு காலத்தில் மிகவும் பிரபல்யமான ஒரு உளவு அமைப்பாக வலம் வந்த கே.ஜீ.பி (KGB) அமைப்பு. சோவித் ஒன்றியத்தின் ஆணிவேர், சோவியத் ஒன்றியத்தின் கண்கள், சோவியத்தின் மூளை என்கின்றதான பல அடையாளங்களுடன் மிகவும் வெற்றிகரமாக வலம்வந்த உளவு அமைப்பு கே.ஜீ.பி உளவு அமைப்பு.

புலம்பெயர்ந்த ஒரு தொகுதி ரஷ்ய பிரஜைகளால் சோவியத்தின் கமியூனிச ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ள ஒரு மிகப் பெரிய புரட்சியை முற்றாகவே கிள்ளி எறிவதற்காக கே.ஜீ.பி உளவு அமைப்பு மேற்கொண்ட ஒரு இரகசிய உளவு நடவடிக்கைதான் "Operation Trust".(அந்த நேரத்தில் சோவியத் ஒன்றியத்தின் உளவு அமைப்பு OGPU என்ற பெயரில்தான் செயற்பட்டுவந்தது. பின்நாட்களில்தான் கே.ஜீ.பி என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது. ஆனாலும் பின்னாட்களில் பிரபல்யமான கே.ஜீ.பி என்ற பெயரையே பரிட்சயம் காரணமாக இந்தக் கட்டுரையில் பாவிக்கின்றேன்)

ரஷ்யப் புரட்சி முடிவடைந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் ரஷ்யாவில் மன்னராட்சியை உருவாக்கும் நோக்கோடு ஒரு புரட்சிகர அமைப்பு உருவானது. அதன் பெயர் Monarchist Union of Central Russia (MUCR). 1921ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த இயக்கம், ரஷ்யாவில் எப்படியும் மீண்டும் மன்னராட்சியை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு போராடி வந்தது. சோவியத் ஒன்றியம் முழுவதிலும் அப்போதைய போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகப் போராடி வந்த பல்வேறு இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு மிகவும் மும்முரமான போராட்டத்தை மேற்கொண்டுவந்தது இந்த MUCR அமைப்பு. இந்த நேரத்தில்தான் கே.ஜீ.பி ஒரு இரகசிய ஒப்பரேஷனை மேற்கொண்டது. மிகவும் கவனமாகத் திட்டமிட்டு, நிதானமாக, மிகவும் இரகசியமாக காய்களை நகர்த்தியது. கே.ஜீ.பி இனது நோக்கமும், திட்டமும் வெறும் MUCR இயக்கத்தை முடக்குவது மாத்திரமல்ல. அதனையும் தாண்டி நீண்ட, விரிந்த திட்டத்தைத் தீட்டியது கே.ஜீ.பி.

சோவியத் ஒன்றியத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருந்த அனைத்து இயக்கங்களையும் கூண்டோடு அழித்துவிடத் திட்டம் தீட்டியது. அது மாத்திரமல்ல. சோவியத்தில் இருந்து வெளியேறி மேற்குலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்து அங்கிருந்தபடி போராடிவரும் அமைப்புகளுக்கும் சேர்த்து வலை விரித்தது கே.ஜீ.பி.. நுணுக்கமானதும், மிகவும் கஷ்டமானதுமான ஒரு உளவுச் சதி. ஆனாலும் அதனை வெற்றிகரமாக மேற்கொண்டு பிபல்யமான ஒரு உலக சாதனை படைத்தது கே.ஜீ.பி. இந்த இரகசிய உளவு நடவடிக்கைக்கு கே.ஜீ.பி சூட்டிய பெயர் "Operation Trust".

முதலில் அந்த புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்தவர்களை சுதந்திரமாகச் செயற்படவிட்டார்கள். அழைத்துப் பேசினார்கள். பகிரங்கமாக ஆர்ப்பாட்டம் செய்ய, கூட்டம் கூட, கருத்துக்கூறவெல்லாம் அனுமதித்தார்கள். திடீரென்று ஒருநாள் ஒட்டுமொத்தமாக அனைத்து செயற்பாட்டாளர்களையும், தலைமையையும் கைதுசெய்தார்கள். ஆனால் இந்த கைது விவகாரம் வெளியே யாருக்குமே தெரியாது. காதும் காதும் வைத்தாற்போன்று அனைவரையும் பிடித்து உள்ளேபோட்டுவிட்டு, கே.ஜீ.பி ஏஜன்டுக்கள் MUCR இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் போன்று செயற்பட ஆரம்பித்தார்கள். கைது செய்யப்பட்ட MUCR இயக்கத் தலைமைகளையும் மிட்டி, சித்திரவதை செய்து பணியவைத்து தங்களது கைப்பாவைகளாக செயற்படவைத்தார்கள். (மனைவி, பிள்ளைகளை இரகசியச் சிறைகளில் பணயம் வைத்துக்கொண்டு, தாம் சொல்கின்றபடி நடந்தாகவேண்டும் என்று மிரட்டினால் பாவம் அந்த இயக்க உறுப்பினர்களால் வேறு என்னதான் செய்யமுடியும்?)

MUCR இயக்கத்தினரைப் போன்று வேடமணிந்து செயற்பட ஆரம்பித்த கே.ஜீ.பி உறுப்பினர்கள், முன்னர் இருந்த MUCR இயக்கத்தைவிட இன்னும் வேகமாக புரட்சி பேசினார்கள். செயற்பட்டார்கள். வெற்றிகரமாகச் சில தாக்குதல்களைக்கூட மேற்கொண்டார்கள். அத்தோடு, சோவியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியபடி ரஷ்யாவிலும், வேறு பல நாடுகளிலும் செயற்பட்டுவந்த மற்றைய அமைப்புக்களுக்கு நிதி உதவிகளும், வேறு பல உதவிகளும் செய்யத் தலைப்பட்டார்கள். இது, MUCR இயக்கம் என்ற பெயரில் செயற்பட்ட கே.ஜீ.பி உளவு அமைப்பிற்கு சோவியத் ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்ட அனைத்து தரப்பினர் பற்றிய முழு விபரங்களையும் திரட்டுவதற்கு பெரிதும் உதவியாக இருந்தது. விபரங்களைத் திரட்டினார்கள். முக்கியமானவர்களைக் கைதுசெய்தார்கள். கைதுசெய்ய முடியாதவர்களை படுகொலை செய்தார்கள். பல்வேறு இயக்கங்கள் மத்தியிலும், இயக்கங்களுக்கு உள்ளேயும் கூட பிளவுகளை ஏற்படுத்தினார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் சோவியத் ஒன்றியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகப் போராடி வந்த அனைத்து இயக்கங்களையும் முடக்கிவிடுவதில் கே.ஜீ.பி உளவு அமைப்பு வெற்றி பெற்றிருந்தது. ஆனால் இந்த ஒப்பரேஷனைப் பொறுத்தவரையில் கே.ஜீ.பி. உளவு அமைப்பிற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்பது, அவர்கள் சோவியத்தில் மாத்திரமல்லாமல் மேற்குலக நாடுகளில் செயற்பட்டுவந்தபல்வேறுஇயக்கங்களையும், செயற்பாட்டாளர்களையும் ஒடுக்குவதின் ஊடாகத்தான் கிடைத்தது.

ஆம், சோவியத் ஒன்றியத்தில் மாத்திரமல்ல ரஷ்யர்கள் புலம்பெயர்ந்து செயற்பட்ட மேற்குல நாடுகளிலும் கூட, கே.ஜீ.பியின் இந்த "Operation Trust" என்ற இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது. ரஷ்யாவில் இருந்து பிரித்தானியாவிற்கு வந்து தஞ்சம் அடைந்த சில கே.ஜீ.பி ஏஜன்டுக்கள், தம்மை MUCR இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று வெளிக்காண்பித்து நடித்துக்கொண்டு சோவியத் அரசிற்கு எதிராக புரட்சிபேசினார்கள். தம்மை தீவிரவாதிகளாக வெளிக்காண்பித்துக்கொண்டு சோவியத் ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வதாகப் 'பவ்லா' காண்பித்தார்கள். புலம்பெயர் நாடுகளில் சோவியத் ஒன்றியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்குஎதிராகச்செயற்பட்டுக்கொண்டிருந்த பல்வேறு சக்திகளையும் ஒன்றுதிரட்டி சோவியத் ஒன்றியத்தின் ஆட்சியைத் தாம் வீழ்த்தப்போவதாக அறைகூவல் விடுத்தார்கள்.

சோவியத்தில் இருந்து புலம்பெயர்ந்து பலநாடுகளிலும் சோவியத் ஆட்சிக்கு எதிராகக் கொதித்துக்கொண்டிருந்த பல இளைஞர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், பெரும் பணக்காரர்கள், ஊடகவியலாளர்கள் இந்த MUCR இயக்கத்தின் வெளிநாட்டுப் பிரிவுடன் சேர்ந்து செயற்பட முன்வந்தார்கள். பலவிதமான உதவிகள் ஒத்தாசைகளை வழங்கினார்கள். பணத்தை அள்ளி இறைத்தார்கள். MUCR என்ற அந்தப் புரட்சிகர அமைப்பைப் பயன்படுத்தி எப்படி சோவியத் ஆட்சியைக் கலைக்கலாம் என்று திட்டம் தீட்டினார்கள். ஆனால் MUCR இயக்கம் என்ற பெயரில் செயற்பட்ட சோவியத்தின் உளவுப் பிரிவினரோ மிகவும் கவனமாகச் செயற்பட்டு ஒரு பெரிய உளவுச் சதியை அரங்கேற்ற ஆரம்பித்தார்கள். அந்த உளவுச் சதி, உலகின் போரியல் வரலாற்றில் மிகவும் உறுதியாகப் பதியப்படும் அளவிற்கு ஒரு மிகப் பெரிய வெற்றியை சோவியத்தின் உளவுப் பிரிவான கே.ஜீ.பிக்குப் பெற்றுக்கொடுத்தது.

**இப்பொழுது ஒரு வரலாற்றுச் சம்பவத்தைப் பார்ப்போம்.**

எங்கள் அனைவருக்கும் ஜேம்ஸ் பொண்ட் 007 என்ற சினிமா காதாபாத்திரத்தை நன்றாகத் தெரியும். இந்த ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரம் ஒரு பிரித்தானிய இரகசிய உளவாளி. மிகப் பெரிய வீர சாகசங்களை தனி ஒருவனாகச் செய்வதில் வல்லவனாக இந்தக் கதாபாத்திரம் அமைக்கப்பட்டிருந்தது. ஜேம்ஸ் பொண்ட் 007 என்ற வீர கதாபாத்திரத்தை உருவாக்கிய எழுத்தாளரின் பெயர் இயான் பிளேமிங் (Ian Fleming). தனது இந்த ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரம் பற்றி இவர் பின்நாட்களில் கருத்துத் தெரிவிக்கும் பொழுது, 'சிட்னி ரெய்லி (Sidnely Reily) என்ற ஒரு பிரித்தானிய உளவாளியின் உண்மையான வீர சாகசம்தான் என்னை ஜேம்ஸ் பொண்ட் 007 கதாபாத்திரத்தை உருவாக்க வைத்தது. இந்த பிரித்தானிய உளவாளியையும், அவனது சாகசங்களையும் அடிப்படையாக வைத்துத்தான் நான் ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்தை உருவாக்கினேன்' என்று தெரிவித்திருந்தார்.

அந்த அளவிற்கு பிரபல்யமான இந்த சிட்னி ரெய்லி என்ற பிரித்தானிய உளவாளி உண்மையிலேயே ஒரு ரஷ்யர். ரஷ்யாவில் பிறந்த இவர் ஏதோ காரணத்திற்காக ரஷ்ய ஆட்சியை வெறுக்கத் தொடங்கினார். சிறு வயதிலேயே தனது குடும்பத்தினருடன் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் தஞ்சம் அடைந்திருந்தார். பிரித்தானியாவின் இரகசியப் பொலிஸ் பிரிவில் இணைந்து இவர் செய்த சாகசங்கள் கொஞ்சநஞ்சமல்ல. உளவாளியாக ரஷ்யாவிற்குச் சென்று அங்கிருந்து பலவிதமாக இரகசியங்களைத் திருடி பிரித்தானியாவிற்கு கொண்டுவந்து பல சாதனைகளைப் புரிந்தார். அந்தக் காலகட்டத்தில் ரஷ்யா என்பது உலகைப் பொறுத்தவரையில் ஒரு இரும்புத் திரையின் பின்னால் இருந்த ஒரு தேசம். அங்கு என்ன நடக்கின்றது என்று உலகில் யாருக்குமே தெரியாது. அப்படிப்பட்ட ரஷ்யாவிற்குள் பல்வேறு வேஷங்களில் நுழைந்து, அங்கிருந்து இரகசியங்களைத் திருடுவதும், அந்த இரகசியங்களை பிரித்தானியாவுக்குக் கடத்தி வருவதும் இலகுவான ஒரு காரியமல்ல. ஆனால் அதனைச் சாதித்துக் காட்டினார் சிட்னி ரெய்லி. அது மாத்திரமல்ல அப்பொழுது இருந்த லெனினின் ஆட்சியைக் கலைத்துவிட்டு சிட்னி ரெய்லியை அதிபராக்கும் இரகசியச் சதித்திட்டமும் பிரித்தானியாவிடம் இருந்தது. அந்த நோக்கத்திலும் பல காய்கள் நகர்த்தப்பட்டுக்கொண்டிருந்தன ரஷ்யாவில்.

சோவியத்தின் இராணுவத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தில் சிட்னி ரெய்லி என்ற இந்த மோசமான உளவாளி பற்றி தெரியவந்த பொழுது, ரஷ்யாவில் தங்கியிருந்த அவர் மிகவும் சாதுர்யமாகத் தப்பி பிரித்தானியா வந்து சேர்ந்தார். மிகவும் பாதுகாப்பாக அங்கு அமர்ந்தும் கொண்டார். அதன் பின்னர் பிரித்தானியாவில் இருந்தபடியே ரஷ்யாவின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதிவேலைகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். இந்த சிட்னி ரெய்லியை கைதுசெய்ததுதான் Operation Trust என்ற இராணுவ நடவடிக்கையின் மிகப் பெரிய வெற்றி என்று வரலாற்றில் பதிவாகி இருக்கின்றது.

**எப்படிக் கைது செய்தார்கள்?**

கைது செய்யவில்லை, ஒரு வகையில் சதி செய்து கடத்திச் சென்றார்கள் என்று கூறலாம். லெனினின் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று சதா சிந்தித்துக்கொண்டிருந்த சிட்னி ரெய்லிக்கு, MUCR என்ற புரட்சிகர அமைப்பின் ஐரோப்பிய வருகை பற்றிய செய்தி இனிப்பாகக் கிடைத்தது. அந்த அமைப்பைத் தொடர்புகொண்டு தனது ஆதரவைத் தெரிவித்தார். மிகவும் சந்தோஷம் என்று அவரை கைகுலுக்கி வரவேற்றது MUCR இனது ஐரோப்பியப் பிரிவு. MUCR என்ற பெயரில் ரஷ்யாவின் கே.ஜீ.பி உறுப்பினர்கள்தான் அங்கு வந்திருக்கின்றார்கள் என்று சிட்னி ரெய்லிக்குத் தெரியாது. தானாகவே சென்று வலையில் வீழ்ந்தார். லெனினின் ஆட்சியை எப்படி வீழ்த்தலாம் என்று அவர்களுடன் சேர்ந்து நுணுக்கமாகத் திட்டம் தீட்டினார். ஆனால், இங்கே லண்டனில் அமர்ந்துகொண்டு லெனினை வீழ்த்துவது எப்படி? ரஷ்யாவில் ஆட்சிதான் அமைப்பது எப்படி? அதற்கு ரஷ்யாவிற்கு நேரில் போகவேண்டும் அல்லவா? 'ரஷ்யாவில் மிகவும் பலமாகச் செயற்படும் எங்களது உறுப்பினர்களூடாக உங்கள் இரகசியப் பயணத்திற்கு நாங்கள் ஏற்பாடு செய்து தருகின்றோம்' என்றது MUCR இனது ஐரோப்பியப் பிரிவு. 'நீங்களே நேரடியாகச் சென்று ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டம் பற்றி விளக்கிச்சொன்னால் அங்குள்ள எங்கள் உறுப்பினர்களுக்குத் தெம்பாக இருக்கும். மேலும் உற்சாகமாகச் செயற்படுவார்கள்.' சிட்னி ரெய்லிக்கு ஐடியா கொடுத்தார்கள் MUCR இனது ஐரோப்பியப் பிரிவு.

ரஷ்யாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு என்று மிகவும் இரகசியமாகப் புறப்பட்ட சிட்னி ரெய்லி, ரஷ்யாவில் பகிரங்கமாகக் கைது செய்யப்பட்டார். அவரை ரஷ்யாவிற்கு இரகசியமாக அழைத்துச் சென்ற கே.ஜீ.பி உறுப்பினர்களே, ரஷ்ய எல்லையை அடைந்ததும் அவரைக் கைது செய்தார்கள்.



**தொடரும்...**

நிராஜ் டேவிட்

# ஜனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள்



இந்தக் கட்டுரையின் தலைப்பு சில வேளைகளில் உரிய காலத்துக்கு மிகவும் முந்திய - தருணப் பொருத்தமில்லாத ஒன்றாகவும் சிலருக்குத் தோன்றலாம். ஆனால், இடையில் எதிர்பாராதவிதமாக அல்லது அரசியல் சூழ்ச்சித்தனமான செயல்களின் விளைவாக ஏதாவது இடையூறுகள் வராமல் இருந்தால், ஜனாதிபதி விக்கிரமசிங்க அறிவித்திருப்பதன் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அடுத்த வருடம் இந்த நேரம் நாம் ஒரு புதிய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் இருப்போம். அதனால் மக்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள் குறித்து பேசுவது பொருத்தமானது அல்ல என்று கூறிவிட முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்களை எவ்வாறு அணுகிவந்திருக்கிறார் என்பதை சில தடவைகள் அல்ல பல தடவைகள் எழுதியிருக்கிறோம். மீண்டும் ஒரு தடவை அதைப் பற்றி எழுதவேண்டிய தேவையை அவர் கடந்தவாரம் இந்தியாவின் பிரபல்யமான ஊடவியலாளர் ஒருவரிடம் தெரிவித்த கருத்துக்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. இந்தியாவின் Firstpost என்ற செல்வாக்குமிக்க இணையத்தள செய்திச்சேவையின் நிருவாக ஆசிரியர் பால்கி சர்மாவுடன் யூரியூப் அலைவரிசையில் 'Vantage with Balki Sharma' என்று நிகழ்ச்சியில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். உள்நாட்டு விவகாரங்கள், பிராந்திய நிலவரங்கள், சர்வதேச அரசியல் மற்றும் கிரிக்கெட் என்று பல்வேறு விவகாரங்கள் குறித்து பால்கி சர்மாவின் கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி சர்ச்சைக்குரிய கேள்விகளுக்கு நழுவல் பதில்களைக் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது. "நீங்கள் ஒரு சிறந்த இராஜதந்திரியாக இருக்கவேண்டியவர் என்று நான் நினைப்பதுண்டு. ஆனால் அரசியல்வாதியாக வந்துவிட்டீர்கள்" என்று ஜனாதிபதியைப் பார்த்து அந்தப் பெண் ஊடகவியலாளர் சிரித்துக்கொண்டு கூறினார்.

"அடுத்த வருட ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவீர்களா?" என்று அவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த விக்கிரமசிங்க தனது முதல் பணி பொருளாதாரத்தை ஒரு உறுதியான நிலைக்குக் கொண்டுவருவதே என்று கூறினார். அதைச் செய்த பிறகு எத்தகைய முடிவை எடுப்பீர்கள் என்று கேட்கப்பட்டபோது முதலில் பொருளாதாரம் உறுதிப்பாட்டுக்கு வரட்டும், அதற்குப் பிறகு எத்தகைய தீர்மானத்தை எடுப்பது என்று பார்க்கலாம் என்று அவர் குறிப்பிட்டார். சிலவேளை உங்களைப் போன்று ஒரு ஊடகவியலாளராக வந்தாலும் வருவேன். உங்கள் செய்தி சேவையில் எனக்கு இடம் தருவீர்களா என்று பால்கி சர்மாவை நோக்கி ஜனாதிபதி நகைச்சுவையாக கேட்க அவரும் நிச்சயமாக உங்களை வரவேற்போம். உங்களிடம் இருந்து அறிய நிறைய இருக்கிறது என்று சிரித்த வண்ணம் பதிலளித்தார்.

முதன் முதலாக 1993 மேயில் பிரதமராக பதவியேற்ற விக்கிரமசிங்கவிடம் நேர்காணல் ஒன்றின்போது அரசியலுக்கு வரவில்லை என்றால் என்ன செய்திருப்பீர்கள் என்று கேட்கப்பட்டபோது பத்திரிகை ஆசிரியராக வந்திருப்பேன் என்று அவர் அளித்த பதில் இச்சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகிறது. அவரின் குடும்பம் ஊடகத்துறையுடன் பின்னிப்பிணைந்தது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் ராஜபக்ஷர்களுடைய கட்சியின் ஆதரவைக் கோருவீர்களா என்ற பால்கி சர்மாவின்கேள்விக்குப்பதிலளித்தஜனாதிபதி தான் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், கட்சி அடிப்படையில் சிந்திக்காத ஜனாதிபதியாகச் செயற்பட்டு வருவதாகவும் கட்சி அடிப்படையில் சிந்திக்கவேண்டிய நேரம் வரும்போது இந்த கேள்விக்குப் பதிலளிப்பதாகவும் கூறினார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து திட்டவட்டமாக அவர் பதிலளிப்பதை தவிர்த்த மேலும் ஒரு சந்தர்ப்பமாக இந்த நிகழ்ச்சி அமைந்தது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் 2024 பட்ஜெட்டை சமர்ப்பித்த மறுநாள் தனது செயலகத்தில் பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்த ஜனாதிபதியிடம் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் எழுப்பிய கேள்விக்கும் நாட்டின் வங்குரோத்து நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதில் முழுமையாக கவனத்தைச் செலுத்தியிருப்பதால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றே அவர் பதிலளித்தார். இதேவேளை, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச கடந்தவாரம் நாடாளுமன்றத்திலும் வெளியில் செய்தியாளர்கள் மகாநாட்டிலும் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்றும் ஏதேனும் சர்வதேச அமைப்பொன்றில் முக்கிய பதவியைப் பெற்றுக்கொண்டு அவர் தனது ஓய்வு காலத்தைக் கழிப்பார் என்றும் கூறியிருந்தார்.

வீரவன்ச அரசியலில் எல்லாம் தெரிந்தவர் என்ற தோரணையில் தான்தோன்றித்தனமாக பேசும் சுபாவத்தைக் கொண்டவர் என்றபோதிலும், அவர் கூறிய கருத்து குறித்து ஜனாதிபதியைச் சந்தித்த ஆளும் கட்சி அரசியல்வாதிகள் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அதற்குப் பதிலளித்த அவர் தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது வீரவன்ச அல்ல என்றும் அரசியலில் தொடருவதா இல்லையா என்பதை தானே தீர்மானிப்பார் என்றும் குறிப்பிட்டார். ஆளும் கட்சியில் இருந்து எதிரணிக்கு பாய்ந்தவர்களும் எதிர்க்கட்சிகளில் இருப்பவர்களும் தனது அரசியல் பயணத்தை ஏதோவொரு வழியில் முடக்கப்பார்க்கிறார்கள் என்று கூறிய ஜனாதிபதி தனது அரசியல் பயணத்தை அவர்களால் ஒருபோதும் முடக்க முடியாது என்று தெரிவித்ததாக செய்திகள் வெளியாகின.

தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஜனாதிபதி கூறுவதற்கு ஜனாதிபதி தொடர்ச்சியாக மறுத்து வருகின்ற போதிலும், அவருக்கு நிகராக அரசியல் அனுபவத்தையும் அறிவையும் சர்வதேச செல்வாக்கையும் கொண்ட வேறு எந்த அரசியல் தலைவரும் இல்லை என்று அவரின் அரசியலை வெறுப்பவர்களில் பலரும் கூட பகிரங்கமாகக் கூறுவதுண்டு. இதுவரையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுமே தங்களை அறிவித்திருக்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கூட தனக்கும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் உத்தேசம் இருக்கிறது என்று சில மாதங்களுக்கு முன்னர் கூறினார். ஆனால், அதை யாரும் கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. அண்மைய கருத்துக்கணிப்புகள் சகலதுமே பிரேமதாசவை விடவும் திசாநாயக்கவே மக்கள் செல்வாக்கில் முன்னிலையில் நிற்பதாக கூறுகின்றன. ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி)யின் பொதுக்கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் மக்கள் பெருமளவில் அணிதிரண்டுவந்தாலும், அந்த ஆதரவு தேர்தல்களில் வாக்குகளாக மாறுவதில்லை என்ற இதுகாலவரையான நிலை இனிமேலும் அவ்வாறே தொடரும் என்று ஒருபோதும் கூறமுடியாது என்பதே அரசியல் அவதானிகளின் பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது.

கடந்த வருடத்தைய அறகலய மக்கள் கிளர்ச்சிக்குப் பின்னரான அரசியல் சூழ்நிலையை அனுகூலமாகப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் செல்வாக்கை கணிசமானளவுக்கு தேசிய மக்கள் சக்தி வளர்த்துக்கொண்டிருக்கிறது. பாரம்பரியமான பிரதான அரசியல் கட்சிகள் மீதான வெறுப்பே இதற்கு முக்கிய காரணம். தேசிய மக்கள் சக்தியின் மக்கள் செல்வாக்கு கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்களுக்கும் ஒரு மருட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அமெரிக்க தூதுவர் உட்பட பல நாடுகளின் தூதுவர்கள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களை அடிக்கடி சந்தித்துப் பேசுகிறார்கள். அமெரிக்கா உட்பட மேற்குலக 'ஏகாதிபத்தியங்களை' கர்ணகடூரமாக எதிர்த்துவந்த அந்தத் தலைவர்கள் அந்தத் 'தோற்றப்பாட்டை' பெருமளவுக்கு மாற்றிக்கொள்ள விரும்புகிறார்கள் என்று தோனறுகிறது.

தங்களிடம் ஆட்சியை தந்துபார்க்குமாறு மக்களுக்கு அறைகூவல் விடுக்கும் அந்தத் தலைவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு உள்நாட்டில் மக்களை அணிதிரட்டுவது மாத்திரம் போதாது சர்வதேச சமூகத்தின் ஆதரவும் தேவை என்ற புரிதலுடன் தங்களது செயற்பாடுகளை முன்னெடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. பொருளாதாரக் கொள்கைகளைப் பொறுத்தவரையிலும் கூட மாறிவிட்ட சர்வதேச நிலவரங்களுக்குப் பொருத்தமான முறையில் தங்களது நிலைப்பாடுகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதாகவும் ஆரம்பகால ஜே.வி.பியை மனதிற்கொண்டு தங்களை மதிப்பிடுவது பொருத்தமானது அல்ல என்றும் அவர்கள் பகிரங்கமாக கூறுகிறார்கள்.

அடுத்ததாக, சஜித் பிரேமதாசவைப் பொறுத்தவரை தனது தந்தையார் விட்டுச்சென்ற இடத்தை நிரப்பக்கூடிய ஒருவராக தன்னை நிரூபிப்பதற்கு அவர் கடுமையாக முயற்சிக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் சிறந்த நாடாளுமன்றவாதியாகவும் செயற்படுவதில் கடும் முனைப்பைக் காட்டுகிறார். ஆனால், பாரதூரமான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை இலங்கை எதிர்நோக்கும் நிலவரத்துக்கு மத்தியில் நாட்டை வழிநடத்தக்கூடிய அரசியல் முதிர்ச்சியுடனும் தொலைநோக்குடனும் கூடிய ஒரு தலைவராக அவரை ஏற்றுக்கொள்வதற்கு நாட்டின் பெரும்பாலான மக்கள் தயாராயிருக்கிறார்களா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

தன்னிடம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை தரமறுத்த விக்கிரமசிங்கவை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத தோல்வியைத் தழுவச்செய்ததன் மூலம் பிரேமதாச தனக்கு அரசியலில் நம்பகத்தன்மையை தேடிக்கொண்டபோதிலும், கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் அழைப்பையேற்று பிரதமர் பதவியை ஏற்காததை வைத்துக்கொண்டு அவர் சவால்களுக்கு முகங்கொடுக்க தயங்கும் ஒரு தலைவர் என்ற எதிர்மறையான பிரதிமையை உருவாக்குவதில் விக்கிரம சிங்கவும் ஐக்கிய தேசிய கட்சியும் முழுமூச்சாக ஈடுபடுகிறார்கள்.

12ஆம் பக்கம் பார்க்க...

**வீரகத்தி தனபாலசிங்கம்**





# இஸ்ரேலியர்களுக்கும், பாலத்தீனர்களுக்கும் புனித நகராக திகழும் ஜெரூசலேம் - உலகின் சர்ச்சை மிகுந்த பிராந்தியமாக இருப்பது ஏன்?



இன்று உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திருக்கும் பெயர் ஜெரூசலேம். மூன்று மதங்களின் புனிதத் தலமாக விளங்கும் இந்த நகரம், மிக மோசமான மோதல்களை சந்தித்திருப்பது மட்டுமன்றி, உலகின் மிகுந்த சர்ச்சைக்குரிய பிராந்தியமாக பார்க்கப்படுவது ஏன் என்று நோக்கும்போது, பல சுவாரஸ்யமான தகவல்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. உலகின் புராதன நகரங்களில் ஒன்றான ஜெரூசலேம், இஸ்லாம், கிறித்துவம் மற்றும் யூத மதத்தினரின் புனித தலமாக கருதப்படுகிறது. ஜெரூசலேத்தில் தனது புதிய தூதரகத்தை அமெரிக்கா திறந்துள்ளது. தூதரக திறப்பு நிகழ்ச்சியில் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பங்கேற்கவில்லை என்றாலும், அவரது மகள் இவாங்கா டிரம்ப், தனது கணவர் ஜாரெட் குஷ்னெர் மற்றும் மூத்த அமெரிக்க அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இஸ்ரேல் நாடு உருவாகிய 70ஆம் ஆண்டு நிறைவு நாளன்று புதிய தூதரகத்தைத் திறக்கும் விதமாக அமெரிக்கா தூதரக திறப்பு விழா திகதியை அமைத்திருந்தமை உங்களுக்கு நினைவிருக்கும்.

இந்த நிலையில், ஜெரூசலேம் ஏன் உலகிலேயே சர்ச்சை மிகுந்த பகுதியாகப் பார்க்கப்படுகிறது என்று விரிவாகப் பார்க்கலாம். ஒன்றுபட்ட ஜெரூசலேம் தனது தலைநகர் என்று இஸ்ரேல் கூறுகிறது. அரபு-இஸ்ரேல் போரில் 1967இல் கிழக்கு ஜெரூசலேமை தனது கட்டுப்பாட்டிற்கு இஸ்ரேல் கொண்டு வந்தது. எதிர்காலத்தில் உருவாக்கப்படும் தன்னுரிமைகொண்ட பாலத்தீன நாட்டின் தலைநகராக ஜெரூசலேம் இருக்கும் என்பது பாலத்தீனர்களின் வாதம். இஸ்ரேலியர்களுக்கும், பாலத்தீனர்களுக்கும் புனித நகராக திகழும் ஜெரூசலேம் நகர் மட்டும் மிகவும் புராதனமானது அல்ல அதைப் பற்றிய சர்ச்சைகளும் பழமையானவையே. இஸ்லாம், கிறித்துவம், யூதம் ஆகிய மூன்று மதங்களுக்கும் புனித தலம் ஜெரூசலேம். இதனாலேயே பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள், யூதர்கள் மற்றும் கிறித்துவர்கள் ஜெரூசலேமிற்கு உரிமை கொண்டாடுகின்றனர். 5,000 ஆண்டு வரலாற்றைக்கொண்ட ஜெரூசலேம் பலமுறை தாக்குதலுக்கு உள்ளாகி, முற்றுகையிடப்பட்டுள்ளது. தரைமட்டமாக்கப்பட்டு மீண்டும் புனரமைக்கப் பட்டுள்ளது. எனவே தான் இந்த நகரின் மண்ணில் சரித்திரத்தின் சுவடுகள் பொதிந் துள்ளதாக கருதப்படுகிறது. உலகின் பழம் பெரும் நகரங்களில் ஒன்றாக ஜெரூசலேம் கருதப்படுகிறது.

### ஜெருசலேத்தில் அமெரிக்க தூதரகம் திறப்பு விழா - நான்கு பாகங்கள் எவை?

பல்வேறு மதங்களின் மக்களிடையே ஏற்பட்டுள்ள பிளவு மற்றும் மோதல் காரணமாக இன்று ஜெரூசலேம் உலக மக்களின் கவனத்தை பெற்றிருக்கலாம். ஆனால் இந்த நகரத்தின் வரலாறோ மக்களை ஒன்றிணைப்பது. நகரின் மையப் பகுதியில் பழைய ஜெரூசலேம் என்று அழைக்கப்படும் புராதன நகரம் அமைந்திருக்கிறது. இது, உலகப் பாரம்பரியச் சொத்தாக (World Heritage) வகைப்படுத்தப்பட்டுள்ளது. அர்மீனியக் குடியிருப்பு, கிறித்தவக் குடியிருப்பு, யூத குடியிருப்பு, முஸ்லிம் குடியிருப்பு என நான்கு குடியிருப்புகளை உள்ளடக்கியது பழைய ஜெரூசலேம். உலகின் மிக புனிதமாக கருதப்படும் இந்த நகரின் நான்கு குடியிருப்புகளும் கோட்டை போன்ற பாதுகாப்பு சுவரால் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு பகுதிகள் கிறித்துவர்களுக்கு சொந்தமானதாக கருதப்படுகிறது. ஏனெனில் அர்மீனியர்களும் கிறித்துவர்களே. நான்கு பகுதிகளிலும் மிகவும் பழமையானது அர்மீனியக் குடியிருப்பு பகுதிதான். மேலும், உலகின் மிகப் பழமையான அர்மீனிய மையம் இங்கிருக்கும் அவர்களது குடியிருப்பு பகுதியே. செயிண்ட் ஜேம்ஸ் தேவாலயம் மற்றும் மடாலயத்தில், அர்மீனியர்கள் தங்கள் வரலாறு மற்றும் கலாசாரத்தை பாதுகாத்து வருகின்றனர்.

### முதல் தேவாலயத்தின் கதை

கிறித்துவர்களின் பகுதியில் திருக்கல்லறை தேவாலயம் (The Church of the Holy Seppelker) அமைந்துள்ளது. இது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை மையமாக கொண்டதாக நம்பப்படுவதால், உலகெங்கிலும் உள்ள கிறித்தவர்களின் நம்பிக்கைக்கு உரிய இடமாக இருக்கிறது. பைபிளின் புதிய ஏற்பாட்டின்படி, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது, இறந்தது, உயிருண்டு எழுந்தது அனைத்துமே ஜெரூசலேமில்தான். கிறித்துவ மரபுகளின்படி, இந்த இடம் கல்வாரி மலை என்று கூறப்படுகிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் செய்யப்பட்ட கல்லறை இங்குதான் இருக்கிறது. அவர் கல்லறையில் இருந்து உயிர்த்தெழுந்ததும் இங்கிருந்துதான் என்று நம்பப்படுகிறது.

கிறித்துவ சமூகத்தினர், குறிப்பாக கிரேக்க பழமைவாத பேட்ரியார்ச்செட், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் பிரான்சிஸ்கன் ஃ பிரையர்ஸ், அர்மீனிய பேட்ரியார்ச்சார்ட் போன்ற வற்றை தவிர, எத்தியோப்பியன், காப்டிக் மற்றும் சிரியாவின் பழமைவாத தேவாலயங்கள் அதோடு தொடர்புடைய போதகர்கள் என இந்த தேவாலயம் கிறிஸ்தவ சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளால் நிர்வகிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் இருக்கும் கோடிக்கணக்கான கிறித்துவர்களின் புனித மையம் இது. ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மக்கள் கிறிஸ்துவின் கல்லறைக்கு வந்து பிரார்த்தனை செய்கின்றனர். இங்கு வந்து பிரார்த்திப்பதும், பாவமன்னிப்பு பெறுவதும் கிறித்துவர்களுக்கு மனநிறைவு தருவதாக கருதப்படுகிறது.

### மசூதியின் கதை என்ன?

ஜெரூசலேமின் நான்கு குடியிருப்புகளில் மிகப்பெரிய குடியிருப்பு பகுதி இஸ்லாமியர்களுடையதுதான். பாறைக் குவிமாடம் மற்றும் அல் அக்ஸா மசூதி இங்கு அமைந்துள்ளது.ஹரம்அல்ஷரீஃப்(புனிதஇடம்) என்று அழைக்கப்படும் இடமும் ஜெரூசலேமில் அமைந்துள்ளது. இஸ்லாமியர்களின் மிகவும் புனிதமான இடங்களின் பட்டியலில் மூன்றாவது இடத்தை பெற்றிருக்கும் அல்-அக்ஸா மசூதி வக்ஃப் என்ற இஸ்லாமிய அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படுகிறது. நபிகள் நாயகம் மெக்காவில் இருந்து ஒரே இரவு பயணத்தில் இங்கு வந்ததாகவும், அவர் இங்கிருந்து தீர்க்கதரிசிகளின் ஆவிகளுடன் பேசியதாகவும் முஸ்லிம் மக்கள் நம்புகின்றனர். இதன் அருகிலேயே பாறைக் குவிமாடம் அமைந்துள்ளது. முகமது நபி ஜெரூசலேமிலிருந்து விண்ணகப் பயணம் சென்றதாக இஸ்லாமியர்கள் நம்புகின்றனர். ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் நாள்தோறும் இந்த புனித இடத்திற்கு வந்து தொழுகை நடத்துகின்றனர். ரம்ஜான் மாதத்தின் வெள்ளிக்கிழமை நாட்களில், இங்கு தொழுகை நடத்துபவர்களின் எண்ணிக்கை மிக அதிக அளவில் இருக்கும்.

### புனிதச்சுவர்

யூதர்களின் பகுதியில்தான், கோட்டை அல்லது மேற்கு சுவர் அமைந்துள்ளது. அல் அக்ஸா மசூதியின் சுற்றுமதிலின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும் மேற்கு சுவர், சிதைந்துபோன நீண்ட சுவரின் எஞ்சியிருக்கும் பகுதியாகும். இந்த இடத்தில் யூதர்களின் புனித கோயில் இருந்ததாக நம்பப்படுகிறது. இந்த புனித தலத்திற்குள் பரிசுத்தமான புனிதப் பகுதி (The Holy of the Holy) அல்லது யூதர்களின் மிகவும் புனிதமான இடம் அமைந்திருந்தது. உலகமே இந்த இடத்தில் இருந்துதான் உருவானது என்றும், நபி இப்ராஹீம் தனது மகன் இஷாக்கை தியாகம் செய்யத் தயாராக இருந்த இடம் என்றும் யூதர்கள் நம்புகின்றனர். பரிசுத்தமான புனிதப் பகுதி (The Holy of the Holy) என்பதே பாறைக் குவிமாடம் (Dome of the Rock) என்று யூதர்கள் நம்புகின்றனர். தற்போது மேற்கு சுவரின் அருகில் உள்ள பரிசுத்தமான புனிதப் பகுதியில் (The Holy of the Holy) யூதர்கள் வழிபாடு செய்கின்றனர். தங்கள் பாரம்பரியத்துடன் தொடர்புடையதாக கருதும் யூதர்கள் இங்கு ஆண்டுதோறும் வருகின்றனர்.

### பதற்றத்துக்கு காரணம் என்ன?

ஜெரூசலேமின் நிலைமையில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் வன்முறை மோதல்கள் வெடிக்கின்றன. புராதன நகரமான ஜெரூசலேம் தொடர்பாக பாலத்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே சர்ச்சைகள் தொடர்கதையாக நீள்கின்றன. இதனால் இங்கு நடைபெறும் சிறிய அசைவும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது.



**யூதர்களின் குடியிருப்பில் இருந்து கிழக்குபுறமாக எடுக்கப்பட்ட புகைப்படம்**

இந்த புராதன நகரம், யூதர்கள், கிறித்துவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு மதரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதோடு, அரசாங்க ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 1948இல் இஸ்ரேல் நிறுவப்பட்டதும், அந்நாட்டு நாடாளுமன்றம் நகரின் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டது. 1967ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் இஸ்ரேல் கிழக்கு ஜெரூசலேமை கைப்பற்றியது. புராதன நகரம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிற்குள் வந்தாலும், அதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஜெரூசலேமின் மீதான இஸ்ரேலின் முழு இறையாண்மையும் ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதால், இஸ்ரேலிய தலைவர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

### ஜெருசலேமின் மக்கள் தொகை

பாலத்தீனர்கள் கிழக்கு ஜெரூசலேமை தங்கள் தலைநகர் என்று உரிமை கோருகின்றனர். இஸ்ரேல் - பாலத்தீன சர்ச்சையில் அமைதியை ஏற்படுத்த சர்வதேச பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜெரூசலேம் இரு நாடுகளின் தீர்வு என்றும் அறியப்படுகிறது. 1967-க்கு முன்னர் இஸ்ரேல் எல்லைப் பகுதியில் சுதந்திர பாலத்தீன நாட்டை உருவாக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது, அது ஐ.நா தீர்மானத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெரூசலேம் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் பாலத்தீன வழித்தோன்றல்கள். இவர்கள் பல நூற்றாண்டுகளாக இங்கு வாழ்ந்து வருகின்றனர். நகரத்தின் கிழக்கில் அமைந்துள்ள யூத குடியேற்றப் பகுதி விரிவாக்கப்படுவதும் சர்ச்சைக்கு முக்கிய காரணம். இங்கு விரிவாக்கம் செய்வதும், கட்டுமானங்கள் கட்டப்படுவதும் சர்வதேச சட்டத்திற்கு விரோதமானவை. ஆனால் இஸ்ரேல் அதை மறுக்கின்றது.

ஜெரூசலேமின் நிலைமையில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலமாகவே வரக்கூடும் என்று சர்வதேச சமூகம் பல தசாப்தங்களாக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதனால் தான் இஸ்ரேலுடன் தூதரக உறவு கொண்ட நாடுகளின் தூதரகங்கள் டெல் அவிவ் நகரில் அமைக்கப்பட்டுள்ளன. ஜெரூசலேமில் துணைத் தூதரகங்கள் மட்டுமே உள்ளன. ஆனால், முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இஸ்ரேலியர்களுக்கும் பாலத்தீனர்களுக்கும் இடையில் சமா தானத்திற்கான இறுதி உடன்படிக்கையாக, அமெரிக்க தூதரகத்தை ஜெரூசலேமுக்கு மாற்றியிருப்பதாக அப்போது கூறினார். இரு நாடுகள் என்ற கருத்தை நிராகரித்த டிரம்ப், இரு தரப்பினரும் ஒத்துப்போகும் ஒரே நாட்டை விரும்புவதாக கூறினார்.

### முதலடி எடுத்த அமெரிக்கா

ஜெரூசலேத்தில் நடந்த அமெரிக்க தூதரக தொடக்க விழாவில், இஸ்ரேலுக்கான முன்னாள் அமெரிக்க தூதர் டேவிட் ப்ரீட்மன் அமெரிக்க தூதரகம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக முறைப்படி அறிவித்தார். "இன்று இஸ்ரேலில், ஜெரூசலேம் நகரில் அமெரிக்க தூதரகத்தை நாங்கள் தொடங்கி வைத்துள்ளோம். முதல் நாடாக தங்கள் தூதரகத்தை திறந்து வைத்ததன் மூலம், மீண்டும் உலகுக்கு வழிகாட்டும் விதமாக அமெரிக்கா செயல்பட்டுள்ளது" என்று டேவிட் ப்ரீட்மன் கூறியிருந்தார். ஜெரூசலேத்தில் நடந்த தொடக்க விழாவுக்கு முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் செல்லவில்லை. ஆனால், அவர் இந்நிகழ்வு தொடர்பாக பேசிய காணொளி ஒன்று தொடக்க விழாவின்போது ஒரு பெரிய திரையில் திரையிடப்பட்டிருந்தது. "சரியாக 70 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேலை உலகில் முதன் முதலில் அங்கீகரித்தது அதிபர் ஹாரி ட்ரூமேன் தலைமையிலான அமெரிக்க அரசுதான். இன்று நாம் ஜெரூசலேம் நகரில் அமெரிக்க தூதரகத்தை திறந்துள்ளோம். இது ஒரு நீண்டகால காத்திருப்பு" என்று டிரம்ப் தெரிவித்திருந்தார். **(தொடரும்...)**

**மறவன்**




கடந்தவாரத் தொடர்ச்சி...

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் புதைகுழிகள் இவை என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

துரையப்பா விளையாட்டு அரங்கு மனிதப் புதைகுழி, யாழ். கோட்டைக்கு அருகில் சிங்கள இராணுவ முகாம் அமைக்கப்பட்டுவரும் இடத்தில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகளின் போது அகழப்பட்ட குழியொன்றினுள் இருந்தே இந்த மனித எலும்புக்கூட்டுத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அகழ்வாராய்ச்சி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இதனை மூடி விவகாரத்தை முடக்கிவிட தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் முற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. குறித்த மனித எலும்புக்கூட்டுத் தொகுதி தொல்லியலுடன் தொடர்புபட்டதா அல்லது அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தின் புதைகுழி எனத் தெரியவரவில்லை. முன்னதாக யாழ். கோட்டையினை அண்மித்த துரையப்பா விளையாட்டரங்கிலும் பாரிய மனித புதைகுழி கண்டறியப்பட்டிருந்தபோதும் கால ஓட்டத்தில் அதுவும் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1999 ஏப்ரல் மாதம், யாழ்ப்பாணத்திலுள்ள துரையப்பா விளையாட்டரங்கில் ஆடை மாற்றும் அறைகளைக் கட்டுவதற்கான அத்திவாரம் அமைக்கும் பணிகளை மேற்கொண்டிருந்த கட்டுமானப் பணியாட்கள், மனித சிதிலங்களைக் கண்டெடுத்தனர். இந்த இடம் தோண்டப்பட்டதில், இரு சிறுவர்களது எலும்புக்கூடுகள் உட்பட மொத்தம் 25 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. ஒரு எலும்புக்கூட்டின் கைகள் கட்டப்பட்டிருந்தன. ஒரு குழந்தையின் எலும்புக்கூட்டில் செம்பு வளையல் காணப்பட்டது. இந்தப் புதை குழியின் ஆதாரங்கள் சந்தேகத்திற்கு உரியவையாக உள்ளது.

### செம்மணி மனிதப் புதைகுழி

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா காலத்தில், செம்மணி மனிதப் புதைகுழி என்கிற அரசியல் சர்வதேச கவனத்தைப் பெற்றிருந்தது. உள்ளூர், சர்வதேச ஊடகங்களும் சுவாரஸ்யமான தகவல்களை இங்கிருந்து திரட்டி வழங்கியிருந்தன. யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்விகற்ற மாணவி கிரிஷாந்தி குமாரசுவாமி, விபத்தில் உயிரிழந்த சக மாணவியின் மரண வீட்டிற்கு சென்று விட்டுத் திரும்பி வந்தபோது செம்மணி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டார். மாணவி கிரிஷாந்தி 1996 ஆம் ஆண்டு புரட்டாதி 7 ஆம் திகதி பாலியல் வன்கொடுமைக்கு, இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார். செம்மணி இராணுவ முகாமில் கிரிஷாந்தி தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியை அறிந்த அவரது தாயார், சகோதரன், அயலவர் உட்பட மூவர் இராணுவ முகாம் நோக்கிச் சென்றனர். அதன் பின்னர் கிரு ஷாந்தியோ அல்லது அவரைத் தேடிச்சென்ற மூவரோ வீடு திரும்பவில்லை.

கிரிஷாந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தினை மறைப்பதற்காகத் தேடிச்சென்ற தாயார், சகோதரன் உட்பட மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்தனர். கிரிஷாந்தி காணாமற்போய் 45 நாட்களின் பின்னர், செம்மணி இராணுவ முகாமிலிருந்து, சில மீற்றர்கள் தூரத்தில் கிரிஷாந்தி உட்பட நால்வரது சடலங்களும் தோண்டி எடுக்கப்பட்டன. தோண்டி எடுக்கப்பட்ட சடலங்களைக் கொழும்பிற்குப் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பிவைக்குமாறு சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் மற்றும் கனிஷ்ட சட்டத்தரணி மா.இளஞ்செழியன் ஆகியோர் அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கையை அடுத்து, சடலம் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கிரிஷாந்தி படுகொலையுடன் தொடர்புடைய ஐந்து இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு, யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற நிலையில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர் சார்பில் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், கனிஸ்ட சட்டத்தரணி இளஞ்செழியன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். இந்த வழக்கு Trial at Bar முன்னிலையில் நீதிபதிகள் நிமால் திசாநாயக்க, அன்ரூ சோமவன்ச, காமினி அபயரட்ண ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நீதிபதிகள் குழு ஐந்து இராணுவத்தினருக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. கிரிஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு முன்னர் நீங்கள் ஏதாவது கூறப்போகின்றீர்களா என வினவியதற்கு, அவர்கள் வழங்கிய பதில் உலகையே ஒருமுறை திரும்பிப்பார்க்க வைத்தது.

சுமார் 400 தொடக்கம் 600 வரையான இளைஞர், யுவதிகள் கொலை செய்யப்பட்டு செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாக கிரிஷ ாந்தி வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இராணுவத்தினரும் வாக்குமூலம் வழங்கினர். இந்தப் படுகொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இராணுவத்தினரும் கண்டி போகம்பரை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கிரிஷாந்தி கொலை வழக்கில் பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மா.இளஞ்செழியன் மன்னார் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். கிரிஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளிகள் வழங்கிய வாக்குமூலத்தினையடுத்து, செம்மணி புதைகுழியினை அகழ்வதற்கு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், யாழ் நீதவான் நீதிமன்ற விசேட நீதிபதியாக நியமிக்கப்பட்டார். செம்மணி புதைகுழி 1999 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 2000 ஆம் ஆண்டு பங்குனி 27 ஆம் திகதி வரையான ஒன்பது மாதங்கள் நடைபெற்றன. கிரிஷாந்தி படுகொலையின் மரண தண்டனைக் கைதிகளை விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து செம்மணி புதைகுழியைத் தோண்டுவதற்கு நீதிபதி மா.இளஞ்செழியன் நடவடிக்கை எடுத்திருந்தார்.

செம்மணியில் 25 புதைகுழிகள் தோண்டப்பட்டு 16 சடலங்கள் மீட்கப்பட்டன. எனினும், அவர்கள் அடையாளப்படுத்திய 10 புதைகுழிகளில் சடலங்கள் இருக்க வில்லை. செம்மணி, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய இராணுவ முகாம்களில் கொலை செய்யப்பட்டவர்களே செம்மணியில் புதைக்கப்பட்டதாகக் கைது செய்யப்பட்டவர்கள் வாக்குமூலம் வழங்கியிருந்தனர். மன்னார் மாவட்ட நீதிபதி மா.இளஞ்செழியன் செம்மணி புதைகுழி அகழ்விற்காக யாழ்.நீதவான் நீதிமன்ற விசேட நீதிபதியாக நியமிக்கப்பட்டு, செம்மணி புதைகுழியைத் தோண்டியதன் பின்னர் நியமனம் நிறைவுபெறும்வகையில் அமர்த்தப்பட்டிருந்தார். இவ்வாறு மீட்கப்பட்ட 16 பேரினது சடலங்களும் அடித்துக் கொலை செய்யப்பட்டவை என மரண விசாரணை தீர்ப்பு வழங்கி, யாழ். நிரந்தர நீதிபதியிடம் வழக்கினை பாரப்படுத்திவிட்டு செம்மணி புதைகுழியின் விசேட நீதிபதி மா.இளஞ்செழியன் தனது பணியினை நிறைவு செய்தார்.

ஆறு மாதங்களின் பின்னர் செம்மணி புதைகுழி வழக்கின் பிரதிவாதிகள் தமக்குச் சட்டத்தரணிகள் இல்லை எனத் தெரிவித்து, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து, வழக்கு யாழ். நீதவான் நீதிமன்றத்திலிருந்து கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில், ஒரு சில மாதங்களின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் ஆறு பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். செம்மணி புதைகுழி சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுப் பிணை வழங்கப்பட்டு 23 வருடங்கள் கடந்த நிலையில் இதுவரை நீதி கிடைக்கவில்லை. அன்று உலகையே உலுக்கிய செம்மணி புதைகுழி தொடர்பில் அனைவரும் இன்று மறந்தவர்களாகவே உள்ளனர். இந்த வழக்கின் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் கடமையைப் பாராட்டி ஐக்கிய அமெரிக்கா 2001 ஆம் ஆண்டு விசேட விருந்தினராக அழைத்து அவரை கௌரவித்து, பிரஜாவுரிமை வழங்கியதுடன், ஒருநாள் மாநகர மேயராகவும் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

செம்மணி புதைகுழியுடன் தொடர்புடைய ஐந்து இராணுவத்தினரையும் பொலிஸ் அதிகாரி ஒருவரையும் கைதுசெய்து, விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட விசேட நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார். 600க்கும் மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன என வெளியான தகவலோடு செம்மணி மனிதப் புதைகுழி பற்றிய கதைகள் மறக்கச் செய்யப்பட்டன. தொடர்ந்து நாட்டில் நிலவிய அரசியல் குழறுபடிகள் செம்மணியை நிரந்தரமாகவே மூடிவிட்டது. செம்மணி மனிதப் புதைகுழி, நம் நினைவுக்கு இலகுவில் கொண்டுவருவதற்காக உதாரணப்படுத்தப்பட்ட ஒன்று. ஆனால், இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் மனிதப் புதைகுழிகள் இருப்பதை, அனைவரும் நினைவுபடுத்துவர். தமிழ் இனப் படுகொலைகளின் ஒரு எச்சம்தான் மனிதப் புதைகுழி. அந்தப் புதைகுழி தொடர்ந்து காலத்திற்குக் காலம் தன் குரலை எழுப்பி வருகிறது. ஆனாலும், வழமையான காலங்கடத்தி மறக்கச்செய்யும் பொறிமுறைகளால் மறக்கச்செய்யப்பட்டன.

### மிருசுவில் மனிதப் புதைகுழி

2000ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி அன்று யாழ்ப்பாணத்திலுள்ள மிருசுவிலில் இடம்பெற்ற சம்பவத்தில் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஞானச்சந்திரன், சாந்தன், ஞானபாலன் ரவிவீரன், செல்லமுத்து தெய்வகுலசிங்கம், வில்வராஜா பிரதீபன், சின்னையா வில்வராஜா, நடேசு ஜெயச்சந்திரன், மற்றும் வில்வராஜா பிரசாத் (வயது-5) ஆகிய எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த எண்மரும் இராணுவத்தினர் 6 பேரால் படுகொலை செய்யப்பட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டது. இதில் படுகொலை செய்யப்பட்ட பிரசாத்திற்கு அப்போது ஐந்து வயது மட்டுமே ஆகியிருந்தது. தமிழர்கள் எட்டுப் பேர் காணாமற்போயிருந்தனர். மறுநாள் இவர்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர்.


இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினரின் பிடியில் இருந்து, காயங்களுடன் தப்பிய ஒருவர், இந்த தகவலை வெளிப்படுத்தியதை அடுத்து, நடத்தப்பட்ட தேடுதலில் எட்டு பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன. இதையடுத்து, 16 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஏற்படுத்தப்பட்டனர். சாவகச்சேரி நீதிவானாக அப்போது, தற்போதைய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் கடமையாற்றினார். 15 இராணுவத்தினரையும் விளக்கமறியல் வைத்த நீதிவான் அன்னலிங்கம் பிரேமசங்கர், சம்பவ இடத்துக்குச்சென்று விசாரணைகளை முன்னெடுத்தார். இராணுவப் பொலிஸார் மற்றும் பொலிஸார் உள்ளிட்டோரின் முன்னிலையில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடம் கண்டறியப்பட்டு அவை மீட்கப்பட்டன. 15 இராணுவத்தினரில் 10 பேரை விடுவித்த சட்ட மா அதிபர் திணைக்களம், 5 இராணுவத்தினருக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்தது. 19 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு 2015ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் லலித்ஜெயசூரிய, பிரீதி பத்மன் சூரசேன ஆகியோரால் வழங்கப்பட்டது.

இதன்படி, ஸ்ராப் சார்ஜன்ட் சுனில் இரத்நாயக்க என்ற இராணுவ இளநிலை அதிகாரி குற்றவாளியாகக் காணப்பட்டு, அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த ஏனைய நான்கு படையினருக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட சான்றுகளில் சந்தேகங்கள் இருப்பதாகக் கூறி, அவர்கள் நால்வரையும் நீதிபதிகள் விடுதலை செய்துள்ளனர். மிருசுவில் படுகொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவிற்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. சுனில்ரத்நாயக்கவிற்குஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஸவினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நான்கு மனுக்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. உச்ச நீதிமன்ற நீதிபதிகளான L.T.B.தெஹிதெனிய மற்றும் யசந்த கோதாகொட ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் இரண்டு மனுக்கள் உறவினர்கள் சார்பிலும், ஏனைய இரண்டும் பொது நல மனுக்களாகவும் தாக்கல் செய்யப்பட்டன.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்திற்கமையவே இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த மனுவிற்கமைய, இவ்வாறு பொது மன்னிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தை நிறுத்துமாறு, அதற்கான இடைக்கால தடையுத்தரவை மனுதாரர்கள் கோருகின்றனர். இந்த மன்னிப்பைப் பெற இராணுவ வீரர் சுனில் ரத்நாயக்கவிற்கு தகைமையில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர். அரசியலமைப்பின்படி எந்தவொருவருக்கும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்க முடியும். பெண்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியவர்களுக்கு இந்நாட்டின் ஜனாதிபதிகள் கடந்த காலத்தில் மன்னிப்பு வழங்கினர்.

**தொடரும்...**

**நிலவன்**



# சினி துளிகள்





## 2023ல் அதிகம் வசூல் செய்த திரைப்படம்

இந்த ஆண்டு தமிழ் சினிமாவில் வெளிவந்த முன்னணி நடிகர்களின் படங்களுக்கும், லோ பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படங்களுக்கும் மாபெரும் வரவேற்பு கிடைத்தது. லியோ, ஜெயிலர், துணிவு போன்ற படங்களும் மாபெரும் அளவில் வசூல் செய்ய, குட் நைட், டாடா, அயோத்தி போன்ற திரைப்படங்களும் எதிர்பார்த்ததை விட மிகப்பெரிய அளவில் வசூல் செய்து வெற்றியடைந்தது.

அந்த வரிசையில் தற்போது தமிழகத்தில் 2023ஆம் ஆண்டு அதிகம் வசூல் செய்த திரைப்படங்கள் என்னென்ன, இதில் யாருடைய திரைப்படம் முதலிடத்தை பிடித்துள்ளது என்று இந்த பட்டியலில் பார்க்கலாம்.

லியோ - ரூ.210 கோடி. ஜெயிலர் ரூ.200 கோடி. வாரிசு - ரூ.142 கோடி. பொன்னியின் செல்வன் 2 - ரூ.140 கோடி. துணிவு - ரூ.127 கோடி. மார்க் ஆண்டனி - ரூ.60+ கோடி. மாமன்னன் - ரூ.55+ கோடி. மாவீரன் - ரூ.52+ கோடி. ஜவான் - ரூ.49 கோடி. வாத்தி - ரூ.42 கோடி.

இதில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் தளபதி விஜய் நடிப்பில் உருவாகி வெளிவந்த லியோ திரைபடம் முதலிடத்தை பிடித்து பொக்ஸ் ஆபிஸில் 2023ல் சாதனை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## காதல் தி கோர் படத்திற்கு எதிர்ப்பு

கடந்த 2021ம் ஆண்டு வெளியான தி கிரேட் இந்தியன் கிச்சன் என்ற படத்தின் மூலம் பிரபல இயக்குனராக மாறியவர் தான் ஜியோ பேபி. தற்போது இவர் இயக்கத்தில் மம்மூட்டி நடிப்பில் உருவாகியுள்ள காதல் தி கோர் திரைப்படம் 23 ம் திகதி வெளிவந்தது. காதல் தி கோர் படத்தில் தன்பாலின ஈர்ப்பாளராக நடித்துள்ள மம்மூட்டி கிறிஸ்தவ சமுதாயத்தை சேர்ந்தவராக காட்டப்படுகிறது.

இந்நிலையில் இது தொடர்பாக கத்தோலிக்க பாதிரியார்கள், அமைப்பினர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளனர். அதில், காதல் தி கோர் திரைப்படம் கிறிஸ்துவர்களுக்கு எதிராக உருவாக்கப்பட்டு உள்ளது. தன்பாலின ஈர்ப்பாளர்களை காட்சிப்படுத்த கிறிஸ்தவ நம்பிக்கையைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## தாமிரபரணி பட நடிகை பானு இப்போ எப்படி இருக்காங்க தெரியுமா?

மலையாள படங்களில் நடித்து வந்த நடிகை பானு, விஷால் நடிப்பில் ஹரி இயக்கத்தில் கடந்த 2007ம் ஆண்டு வெளியான தாமிரபரணி என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார்.

முதல் படத்திலேயே கோலிவுட் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தார். இதையடுத்து இவர் தமிழில் சில படங்களில் நடித்தார், அந்த படங்கள் இவருக்கு பெரிய அளவில் கைகொடுக்கவில்லை. கடைசியாக பானு, தமிழில் வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க என்ற படத்தில் நடித்தார்.

பானு கடந்த 2015 ம் ஆண்டு ரிங்கு என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு கியாரா என்ற மகள் உள்ளார். இந்நிலையில் நடிகை பானு தனது குடும்பத்துடன் எடுத்துகொண்ட புகைப்படம், தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.



## அஜித்தை போல் எல்லோராலும் இருக்கமுடியாது - புகழ்ந்து கூறிய வெற்றிமாறன்



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்கள் என்றால் இப்படிதான் இருக்க வேண்டும், இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அப்படி ஒன்றும் கிடையாது, இதுபோன்றும் இருக்கலாம் என தனி வழியை பின்பற்றியவர் அஜித்.

இப்போது மகிழ்திருமேனி இயக்கத்தில் விடாமுயற்சி என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தை தொடர்ந்து ஆதிக் ரவிச்சந்திரன், வெற்றிமாறன் போன்ற இயக்குனர்கள் படத்தில் தான் அஜித் நடிக்கிறார் என கூறப்படுகிறது, ஆனால் எதுவும் உறுதியாகவில்லை.

அண்மையில் மிக்ஜாம் புயலில் சிக்கிய பாலிவுட் நடிகர் அமீர்கான் மற்றும் விஷ்ணுவிற்கு பாதுகாப்பாக இருக்க சில உதவிகள் செய்துள்ளார். அதேபோல் மக்களுக்கு வெளியே தெரியாத அளவிற்கு உதவிகள் செய்து வருகிறார்.

அஜித்தை இவரும் இயக்கப்போகிறார் என வெற்றிமாறன் அடிபட்ட நாளில் இருந்து அவரது பழைய பேட்டி வீடியோ ஒன்று வைரலாகிறது வருகிறது. வெற்றிமாறன் மங்காத்தா பட நேரத்தில் ஒரு பேட்டி கொடுத்துள்ளார்.

அதில் அவர், திரையுலக பின்னணி இல்லாமல் சினிமாவுக்குள் வந்த அஜித்தை எனக்கு மிகவும் பிடிக்கும், அவர் தன்னைத்தானே உருவாக்கிக்கொண்டவர்.

அதேபோல் தன்னுடைய மனதில் பட்டதை யாருக்கும் அஞ்சாமல் பேசக்கூடியவர். அதைப்போல் எல்லோராலும் இருந்துவிட முடியாது, அந்த விஷயம் அஜித்திடம் எனக்கு பிடிக்கும் என கூறியுள்ளார்.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

29

வன்னி எங்கும் மாவீரர் நாள் ஏற்பாடுகள் தொடங்கிவிடும். மாவீரர் நாளின் முக்கிய விடயமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கை விளக்க உரை இடம்பெறும். தமிழீழ தேசிய தலைவரின் உரைக்காக தமிழ் மக்கள் மட்டுமல்ல உலகெங்கும் அவர் சொல்லப்போகின்ற செய்தியைக் கேட்பதற்கு காத்திருப்புக்கள் நிகழும். தலைவரின் உரை ஒளிப்பதிவு செய்யும் நிகழ்வு இரகசியமான இடத்திலே நடைபெறும். அது எந்த இடம் என்று தெரிந்துகொள்ள முடியாத படையினர் மாவீரர் நாளுக்கு முதல் நாள் தொடங்கி கடுமையான வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கிவிடுவார்கள். தொடர்ச்சியான தீவிரமான தாக்குதல்களாக இவை நடைபெறும்.

இதன் மூலம் தலைவர் உரையாற்ற வருவதைத் தடுப்பது அல்லது அதன்போது கொல்வது மற்றும் மாவீரர் நாள் நிகழ்வுகளில் மக்கள் கலந்துகொள்ளாமல் தடுப்பதும் முக்கியமானதாக இருந்தது. இந்த நிலையில் தான் சிங்கள ஊடகம் ஒன்றின் தலைப்பு செய்தியாக பிரபாகரனின் இறுதி மாவீரர் நாள் இதுவாகத்தான் இருக்கும் என்று



எழுதியிருந்தது. இந்த செய்தி சில தளபதிகள், பொறுப்பாளர்கள் மத்தியில் தெரிகிறது. சிறிலங்கா அரசின் நினைப்பு எவ்வாறு அமைகிறது என்றால் தலைவர் அவர்கள் நேரடியாகத்தான் மாவீரர் நாள் உரையாற்றுவார். இதனை புலிகளின் குரல் ஊடகம் தான் ஒலிபரப்பு செய்யும். எனவே இந்த நிலையம் மீது தாக்குதல் நடத்திவிட்டால் தலைவரின் மாவீரர் நாள் செய்திகள் மக்களை சென்றடையாமல் தடுக்கலாம் என்ற எண்ணம் சிங்களத்தின் இந்த புரிதலை புரிந்துகொண்டிருந்த விடுதலைப்புலிகளின் தலைமைத்துவம் புலிகளின் குரல் பொறுப்பாளருக்கு சில நடவடிக்கைகள் குறித்து முன்னேற்பாடு மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

அதாவது மாவீரர் நாள் அன்று புலிகளின் குரல் மீது விமானப் படை தாக்குதல் நடத்தலாம் என்றும் இதற்கமைய பல்வேறு மாற்றங்களை செய்து ஒலிபரப்பினை நடத்துமாறு அறிவிக்கப்படுகிறது. இதற்கமையவே அன்றைய புலிகளின் குரல் மூன்று இடங்களில் தனது ஒலிபரப்பினை நடத்தியது. அதாவது (fm 98, 100, 103.5) ஆகிய அலைவரிசைகளில் வன்னி எங்கும் புலிகளின் குரல் ஒலிக்கிறது. புலிகளின் குரலின் ஆவணங்கள் அன்று இடமாற்றப்படுகின்றன. இவ்வாறு புலிகளின் குரல் ஈடுபடுகிறது.

புலிகளின் குரல் மட்டுமல்ல விடுதலைப்புலிகளின் கிளிநொச்சியில் உள்ள முதன்மையாக ஒலியமைப்பு செயலகங்களின் ஆவணங்கள் கூட இடமாற்றப்படுகின்றது. இதன்போதுதான் மாவீரர் நாளை (27.11.2007) அன்று மாலை (4.30) மணியளவில் சிறிலங்கா வான்படையின் கிபிர் விமானங்கள் புலிகளின் குரல் நடுவ பணியக வளாகத்தின் மீது தாக்குதலை நடாத்துகின்றன. ஆனால் அன்று மாவீரர் நாள் என்றபடியால் மக்கள் பெருமளவில் மாவீரர் துயிலும் இல்லங்களில் புலிகளின் குரலினை கேட்டுக்கொண்டேயிருந்தார்கள்.

புலிகளின் குரல் மீது தாக்குதல் நடந்தும் புலிகளின் குரல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. இத்தாக்குதலில் புலிகளின் குரல் அறிவிப்பாளர் இசைவிழி செம்பியன் உள்ளிட்ட மூன்று பணியாளர்களும் வீதியால் சென்றுகொண்டிருந்த எட்டு பொதுமக்களும் உயிர் இழக்கிறார்கள். சிலர் காயங்களுக்கு உள்ளாகிறார்கள். எனினும் எவ்வித இடையூறுகளும் இன்றி அன்று மாவீரர் நாள் நிகழ்வுகளை தாங்கியவாறு புலிகளின் குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது. புலிகளின் இரவு (8.30) செய்தியில் தான் புலிகளின் குரல் மீது சிறிலங்கா விமானப் படையினர் தாக்குதல் நடத்திவிட்ட செய்தியே வெளிவருகிறது. புலிகளின் குரல் மீது சிறிலங்கா வான்படை நடாத்திய முதல் தாக்குதல் இதுவல்ல. 13வது தாக்குதல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. இது ஊடகத்தை அழிக்கும் செயற்பாடாக சிறிலங்கா அரசு செயற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை அன்றைய மாவீரர் நாள் நிகழ்வில் சிறிலங்காவின் போர் வெறியை சுட்டிக்காட்டியிருந்த தேசிய தலைவர், சர்வதேசத்தின் மீது குற்றச்சாட்டு ஒன்றை நேரடியாகவே சுமத்தினார். அது தமிழ்ச்செல்வனின் சாவு குறித்து தனது உரையில் சமாதானத்துக்காக உழைத்த எமது தவப்புதல்வன் தமிழ் செல்வனை சர்வதேசம் சமாதானம் பேசியே சாகடித்திருக்கிறது என்று குற்றம் சாட்டியிருந்தார்.

அமைதிப் பாதையில் பயணித்த எமது விடுதலை இயக்கத்தின் இதயத்துடிப்பு வலுக்கட்டாயமாக இழுத்து நிறுத்தியிருக்கிறது. எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டி மறைந்த மாவீரருக்கு ஆண்டுதோறும் விளக்கு ஏற்றும்போது எப்போதும் என்னருகில் இருந்த அன்பு தம்பி தமிழ்ச்செல்வனுக்கும் சேர்த்து இம்முறை என் கையால் ஈகைச் சுடரேற்றும் நிலைமையை சர்வதேசம் உருவாக்கி இருக்கிறது. உலகத் தமிழினத்தையே கண்ணீரில் கரைத்து கலங்க வைத்திருக்கிறது.

சிங்கள தேசத்தின் சமாதான விரோத போக்கை போர் வெறியை உறுதியோடு கண்டித்திருந்தால் தமிழ்ச்செல்வன் இன்று உயிரோடு இருந்திருப்பார். சமாதானத்திற்கு இப்படியொரு பேரிடி விழுந்திருக்காது. சமாதானத்தின் காவலர்களாக வீற்றுஇருக்கும் இணைத்தலைமை நாடுகளும் இந்த பெரும் பொறுப்பிலிருந்து தவறியிருக்கின்றன என்று சர்வதேசத்தின் மீது தமிழ்ச்செல்வனின் சாவுக்கான குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார்.

இதேவேளை வன்னியில் விடுதலைப்புலிகளின் முகாம்கள் சிறிலங்கா படைகளின் வான்படை தாக்குதல்களுக்கு இலக்காகிக் கொண்டிருந்தன. மிக நவீன கண்காணிப்பு சாதனங்களுடன் வன்னியை கண்ணில் எண்ணையை விட்டுப் பார்த்துக்கொண்டிருந்த சிறிலங்காவிற்காக பார்த்துக் கொண்டிருந்த வேவு விமானங்களும் விண்வெளிக் கண்களுக்கும் மண்ணைத் தூவிவிட்டு அனைத்து காரியங்களையும் செய்வது சாத்தியமல்ல. சில நடவடிக்கைகள் நகர்வுகள் அவர்கள்பார்த்துக்கொண்டு இருக்கவே செய்யவேண்டிய நிலை. இந்த நிலையில் தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியானது. பொறுப்பாளர்கள் தளபதிகள் எல்லோரும் நடவடிக்கைகளுக்காக செயற்பட்டு வசதி கருதி கிளிநொச்சியை மையப்படுத்தியே தமது இருப்பிடங்களைத் தீர்மானிக் கிறார்கள்.

ஏன் தலைவர் அவர்கள் கூட கிளிநொச்சியில் சில இடங்களில் தனது முகாம்களை அமைத்திருந்தார். அங்கு தளபதிகள், பொறுப்பாளர்களுடன் பல சந்திப்புக்களை நடாத்தி இருக்கின்றார். தலைவர் அவர்களின் குடும்பமும் கனகாம்பிகை குளத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் தான் தங்கி இருந்தார்கள். காரணம் கடைசி மகனின் படிப்பும், மகளின் கணனித்துறை படிப்பும் இவர்களை இப்பகுதியில் குடியேற வைத்திருந்தது.

இந்த வீட்டில் இருப்பவர்கள் முக்கியமானவர்கள் என்பதை அயலவர்களுக்கு வந்துபோகும் வாகனம் புரிய வைத்திருக்கும். இதனை தகவலாகக் கொண்டு கனகாம்பிகை குளத்தில் உள்ள தலைவர் அவர்களின் துணைவி, பிள்ளைகளின் வீடு மீது சிறிலங்கா படையினர் வான் தாக்குதலை நடத்துகின்றார்கள். தாக்குதல் துல்லியமானதாக இருந்தாலும், தலைவர் அவர்களின் துணைவியார், கடைசி மகன் உள்ளிட்டோர் காயங்கள் எதுவுமின்றி தப்புகிறார்கள்.


அத்துடன் இத்தாக்குதலின் பின் தங்கள் இருப்பிடங்களை மாற்றுகின்றார்கள். இருந்தும் தலைவர் அவர்களின் பாதுகாப்பு அணிகள் உள்ள முகாம்களும் அன்று சிறிலங்கா வான் படையின் தாக்குதலுக்கு இலக்காகிறது.

இவ்வாறு இருக்கும் போதுதான் அன்று கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் உருத்திரபுரம் என்னும் பகுதிக்கு இடையில் தமிழீழத் தேசியத் தலைவர் வந்துபோகும் இடம் ஒன்றும் இருந்தது. இது அப்பிரதேச மக்களுக்கும் சற்று தெரியும். உருத்திரபுரம் 10ஆம் வாய்க்கால் என்னும் பகுதியில் தலைவர் அவர்கள் தங்கி நிற்கும் பாரிய முகாம் ஒன்றும் இருந்தது. தளபதிகள், பொறுப்பாளர்கள் அறிந்த விடயம். அன்று ஒருநாள் அந்த முகாமிற்கு தலைவர் வந்துவிட்டார். ஆனால் மறுபுறத்தில் கிபிர் விமானங்களும் புறப்பட்டு வன்னி நோக்கி வந்துகொண்டிருந்தன.



தொடரும்...

# "இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது"



– பேராசிரியர் சி.பத்மநாதன் –

கடந்தவாரத் தொடர்ச்சி...

இவை பற்றிய செய்திகள் ஊடகங்கள் வாயிலாக மாத்திரம் சர்வதேச மட்டத்திலும் மிக வேகமாகப் பரவியது. அதன் எதிரொலியாக கிழக்கிலங்கையிலே பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்திலே பல்வேறு தரப்பினரிடையேயும் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. பல்கலைக்கழகம் தான் இதற்கு புறநடையாக இருந்தது. அதற்கு வெளியில் இருந்தவர்கள் தான் அதிகமாக இவற்றிலே கவனம் கொண்டு தம்முடைய இருப்பிடங்களில், சென்று வழிபடுகின்ற ஆலயங்களில், வேறு இடங்களில் காணப்படுகின்ற எழுத்துப் பொறித்த கற்கள், வேறு பொருட்களை எல்லாம் படமெடுத்துக் காட்டத் தொடங்கினர். இதனால் தான் சடுதியாகவும், மிக வேகமாகவும் விரைவிலே தமிழ் பெயர்கள் பொறித்த மிகப் புராதனமான சின்னங்களை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளிலும், திருகோணமலையிலும் இனங்காண முடிந்தது.

இதிலே சிறப்பம்சம் என்னவென்றால், எழுத்துப் பொறித்த சில தொல்பொருள் சின்னங்கள், பெருங்கற்கால பண்பாட்டிற்குரியனவாகும். கதிரவெளியில் ஒரு கல்மேசை இருப்பதாக முன்பு கூறினார்கள். ஆனால் அதை இப்போது காணவில்லை. குருநாகல் மாவட்டத்தில் பதிய கம்பளை என்னுமிடத்தில் ஒரு பிரமாண்டமான அளவுடைய பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்திற்குரிய கல்லறை காணப்படுகின்றது. நான்கு மாதங்களுக்கு முன்பு அதை நான் சென்று பார்த்த போது அதிலே தமிழ்ப் பிராமி வரி வடிவங்களும், ஐந்து தலை நாகம், நாக தந்த உருவங்கள், ஒருதலை நாக வடிவங்கள் எனப் பலவற்றை அவதானிக்க முடிந்தது.

அடுத்து வெல்லாவெளியிலும், வாகரையிலும் ஈமக் கல்லறைகளை சுற்றிய இடங்களில் அடுக்கிவைக்கப்பட்ட கற்களிலும் எழுத்துக்களை, வாசகங்களை கண்டோம். ஒரு இடத்திலே பாம்பு வடிவமும் பொறிக்கப்பட்டிருந்தது. இவற்றிற்கு அப்பால் இபன்கட்டுவ என்னுமிடத்தில் பெருந்தொகையான கல்லறைகளை அகழ்வு செய்துள்ளார்கள். கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் அங்கு ஒரு விசாலமான பெருங்கற்கால பண்பாட்டு மக்களின் ஈமக்காடு அமைந்துள்ளது. அங்குள்ள கல்லறைகளின் சுவர்கள் அல்லது கற்பலைகளில் தமிழ் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருப்பதை காண முடிந்தது.

**கேள்வி - தமிழ் மொழியின் தொன்மை தொடர்பான தமிழ் நாட்டின் தொல்லியல் சான்றுகளுக்கும் இலங்கையில் காணப்படும் தொல்லியல் சான்றுகளுக் குமிடையேயான பொதுமைத் தன்மைகள், வேறுபாடுகள் பற்றிக் கூறமுடியுமா?**

பதில் - தமிழர் தொடர்பான பெருங்கற்கால பண்பாடு தமிழகத்திலிருந்து தான் இலங்கையில் பரவியது. மொழி, உற்பத்திமுறை, பயன்படுத்தும் உபகரணங்கள் ஆகியவற்றில் வேறுபாடு இல்லை. எழுத்து முறை தமிழ்நாட்டைப் போல இங்கும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறித்த கலவோடுகள் பெருங்கற்கால பண்பாட்டு சின்னங்களோடு தான் காணப்படுகின்றன. பிரதானமான வேறுபாடு வழிபாட்டுச் சின்னங்கள், கட்டுமானங்கள் என்பனவற்றைப் பற்றியதாகும். கீழடியில் அகழாய்வு செய்தவர்கள் அங்கு வழிபாட்டுச் சின்னங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இலங்கையில், கிழக்கிலங்கையிலும் ஏனைய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் பெரும்பாலும் வழிபாடுகளோடு தொடர்புடையவை. நாக சிற்பங்கள் நாகருடைய வழிபாட்டுடன் தொடர்புடையவை. அதுபோல பெருங்கற்காலத்து கல்லறைகளில் நாகத் தலைகள், திரிசூலம் என்பனவும் இடையிடையே காணப்படுகின்றன. பௌத்த பள்ளிகளிலும் கூட நாக வடிவங்கள் காணப்படுகின்றன. ஐந்து தலை நாகம் காணப்படுகின்றது. அதேவேளை தூண் நிரைகள் சிலவற்றிலும் சிறிய அளவிலான நாக வடிவங்கள் காணப்படுகின்றன. இங்கு நான்கு வழிபாட்டு முறைகள் பற்றிய தமிழ்ப் பிராமியில் பொறிக்கப்பட்ட பண்பாட்டுச் சின்னங்கள் உள்ளன. நாக வழிபாடு, சைவ சமய வழிபாடு சார்ந்த லிங்கம், நந்தி போன்ற உருவங்கள், பௌத்த சமய வழிபாடு தொடர்பான புத்தர் வடிவங்கள், திருப்பாத வடிவங்கள் போன்றவற்றிலும் அவை காணப்படுகின்றன. அதுபோல முன்பு கூறியது போல சமண சமயம் சம்பந்தமான ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது.

இரண்டாவது வேறுபாடு கட்டுமானங்களைப் பற்றியதாகும். இலங்கையில் நாகர்கள் தூண் தாங்கு கற்கள் என்று சொல்லக்கூடிய வடிவங்களை பரவலாக பயன்படுத்தியுள்ளார்கள். இவை கற்பிட்டி முதல் பருத்தித்துறை வரையிலும், கந்தரோடை முதல் சங்கமன்கண்டி வரையிலும் காணப்படுகின்றது ஒரு விசேட அம்சமாகும். தூண் தாங்கு கற்கள் தமிழகத்தில் இருந்தமைக்கான சான்றுகள் வெளிவரவில்லை. அதுமட்டுமன்றி, பல்லவர்களுடைய கட்டுமானங்கள் கற்களில் உருவாவதற்கு முன்னரே இலங்கையில் நாகர்கள் சிற்பக் கலையிலும், கட்டிடக் கலையிலும் பெரும் சாதனைகளை ஈட்டியுள்ளார்கள். கற்தூண்கள் அமைந்த கட்டிடங்கள் பல இலங்கையின் வடக்கு கிழக்கு பாகங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

இலங்கையின் மத்திய பகுதியில் அநுராதபுரம் போன்ற பகுதியில் காணப்படு கின்ற ஆதியான கட்டுமானங்கள் நாகருடைய கலைப்பாணியில் அமைந்தவை. அதேபோல பிற்காலத்திலே அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட சந்திர வட்டக் கற்கள் என்னும் அமைப்புக்கள் நாகர்கள் தங்கள் கட்டிடங்களிலே வாயிற் கதவுகளாக வைத்த அரை வட்டக் கற்களை மூலமாகக் கொண்டவை. மேலும் யாழ்ப்பாணத்தில் நவாலி, மாவிட்டபுரம், வல்வெட்டித்துறை போன்ற இடங்களிலும் கல்முனை சேனைக்குடியிருப்பு தாந்தாமலை ஆகிய இடங்களிலும் தூண்களோடு கல்லினால் அமைந்த கட்டிடங்களை அமைப்பதற்கும் அவர்கள் பழகியிருந்தார்கள் என்று கொள்ள முடியும். அதுபோல இலங்கையிலே அதி உன்னதமான பழைய சிற்பம் என்று கருதப்படும் இசுறுமுனியாவில் உள்ள குதிரைத் தலையுடன் கூடிய ஐயநார் வடிவமும், நடனமாதர் சிற்பங்களும், சேருவிலவில் காணப்படும் அதி உன்னதமான அளவிலே பெரிய புத்தர் பெருமானின் கற்சிற்பங்களும் நாகர்களுடைய வேலைப்பாடு என்பது இப்போது தான் தெரியவந்துள்ளது.

**கேள்வி - யுனெஸ்கோவின் பாரம்பரிய கலாச்சார மற்றும் இயற்கை நினைவுச் சின்னங்கள் தொடர்பான வரையறைவுகள் எவை? இலங்கையில் அவ்வாறு ஏதாவது சின்னங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா? இலங்கையில் அவ்வாறான வரையறைக்குள் அடங்கக்கூடிய தமிழர் பாரம்பரிய, கலாச்சார மற்றும் இயற்கை நினைவுச் சின்னங்கள் எவையாக அமையலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்? அவ்வாறான அங்கீகாரத்திற்காக ஏதாவது முயற்சிகள் செய்யப்பட்டுள்ளனவா?**

பதில் - யுனெஸ்கோவினால் பாதுகாக்கப்பட வேண்டியதென தீர்மானிப்பதற்கான சில பரிமாணங்கள் உண்டு. அவை பொதுவானவை. எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். யுனெஸ்கோ நிறுவனம் அரசாங்கங்களோடு தான் தொடர்புகொள்வதுண்டு. தனியார் நிறுவனங்களோடோ அல்லது நாட்டிலுள்ள பிராந்திய சபை, பிரதேசசபை ஆகியவற்றோடு தொடர்புகொள்ளும் அதிகாரமும் வழக்கமும் இல்லை. அரசாங்கத்தினாலே சிபார்சு செய்யப்படுகின்ற தலங்களைத் தான் அவர்கள் பரிசீலனை செய்வர். இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய கலாசார திணைக்களமும், தொல்பொருள் திணைக்களமும் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதலாக எத்தகைய அணுகுமுறையை கையாள்கின்றன, பின்பற்றுகின்றன என்பதை நான் சொல்லித் தான் தெரிய வேண்டியதில்லை.

ஆரம்பத்திலே அவர்கள் பழைய இராசதானிகளான அநுராதபுரம், பொலநறுவை, கண்டி, தம்புள்ள போன்றவற்றை தான் பெருமளவில் சிபார்சு செய்தார்கள். இவை அனைத்தும் பௌத்த சமயம் தொடர்பானவை. பொலநறுவையிலும், கண்டியிலும் இந்துக் கோயில்களும் காணப்படுகின்றன. ஆனால் அவற்றைப் பற்றி எவரும் பேசுவதில்லை. பொலநறுவையில் உள்ளவை சிவாலயங்களின் அழிபாடுகள் பல இப்பொழுது காணப்படுவதில்லை. முதலாம் சிவாலயம், இரண்டாம் சிவாலயம், ஐந்தாம் சிவாலயம் என்பனவே பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக கொள்ளப்படுகின்ற போதிலும் தேடுவாரற்றநிலையிலேகாணப்படுகின்றன. தமிழர்களின் அல்லது இந்துக்களுடைய நிறுவனங்கள் என கொள்வோமாயின், அநுராதபுரம், பொலநறுவை போன்ற இடங்களைப் போல புராதன கட்டிடங்களின் அடிபாடுகள் குவிந்து காணப்படும் இடங்களில்லை. அவை போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டதனால், அவற்றின் அழிபாடுகளின் எச்சங்களும் காணப்படுவதில்லை. முன்னேஸ்வரம், திருகோணமலை அகஸ்தியர் ஸ்தாபனம் போன்ற இடங்களில் யுனெஸ்கோவின் ஆதரவில் பாதுகாப்பை தேடலாம். ஆனால் இவற்றை ஒருவரும் முன்வைக்கவில்லை.

முன்வைப்பதானால் தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணை வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் கலாசார நிறுவனத்தின் அனுசரணை வேண்டும். இவற்றை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாது. ஒருமுறை திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், திருக்கோணேஸ்வரம் முதலிய ஆலயங்களின் புராதன சின்னங்களை யுனெஸ்கோ பாதுகாப்பு சின்னங்களான பிரகடனப்படுத்த வேண்டுமென முன்னொரு காலத்திலே இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஒரு தமிழர் விரும்பினார். அதற்காக ஒரு கூட்டம் கைலாசபிள்ளையின் வீட்டிலே கூட்டப்பட்டது. தொடக்கத்தில் அவர்கள் என்னை அழைக்கவில்லை. தமிழர் தரப்பில் கூடியவர்கள் என்னை அழைக்கவில்லை. ஆனால் சிங்களவர் தரப்பிலுள்ளவர்கள், பழைய தொல்பொருள் திணைக்களத்தினரும், வேறு சிலரும் வற்புறுத்தியதனால் தான் கூப்பிட்டார்கள். இது ஒரு முக்கியமான விடயம் அங்கு கூடிய தமிழர் எவருக்கும் தொல்லியல் வரலாறு பற்றி அறிவு இல்லை. காலம் போக இந்தக் கூட்டத்தைக் கூட்டியவர்கள் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள், கலாசார அமைச்சைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய உள்நோக்கமும் வேறாக இருந்தது. அப்படி இவற்றை தொல்லியல் சின்னங்களாக்க வேண்டுமானால், இவற்றுடன் கோட்டைகள், துறைமுகங்கள் ஆகியவற்றையும் சேர்க்க வேண்டுமென்று மறைந்த தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளரான றோலன் டி சில்வா சொன்னார். இது ஒரு ஆபத்தான திட்டம். ஏனெனில், கோட்டைகள் என்று சொல்லும் போது இராணுவமயமாகும். இதுபோலவே துறைமுகங்களும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும். எங்கள் ஆலயங்களும் அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் போகும். யுனெஸ்கோ என்று சொன்னாலும் நிர்வாகம் செய்பவர்கள் இங்குள்ளவர்களே. அப்போது தான் எனக்கு புரிந்தது யுனெஸ்கோவின் ஆதரவை நாடுவது ஆபத்தானது.

**கேள்வி - இலங்கையில் தமிழர்களின் பூர்வீக இருப்புத் தொடர்பில் அகழாய்விற்கு உட்படுத்தப்படவேண்டிய முக்கிய இடங்களாக நீங்கள் எவற்றைப் பார்க்கின்றீர்கள்? இந்த அகழ்வாய்வுகளை வட கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா?**

பதில் - ஏற்கனவே மாந்தையிலும், கந்தரோடையிலும் அகழாய்வுகளை செய்துள்ளோம். மாந்தையிலே பல தடவைகளாக தொல்பொருளியல் திணைக்களத்தினுடைய அனுசரணை யோடு, வெளிநாடுகளைச் சேர்ந்த புலமைமிக்க தொல்லியலாளர்கள் அகழ்வுகளை செய்துள்ளனர். புலமை மிக்கவர்கள் என்று சொல்லுகின்ற போது அவர்கள் பல நாடுகளிலும், பல தலங்களிலே அகழாய்வுகளை செய்திருக்கிறார்கள். ஒப்பியல் நோக்கில் சர்வதேச தொடர்புகள், அக்காலங்களில் நடைபெற்ற சர்வதேச வாணிபம், பொருட் பரிவர்த்தனை முதலியவற்றிலே தான் அவர்களுக்கு கூடுதலான அக்கறையும், அனுபவமும் உண்டு. அகழ்வுநடைபெறும் பிராந்தியத்தின் வரலாறு, பண்பாடு தொடர்பான ஆழமான புலமை அவர்களிடம் காணப்படவில்லை.

தொடரும்...

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலும், ரணிலின் சர்வதேச விசாரணையும் - நடக்கப்போவது என்ன?

## பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

கடந்தவாரத் தொடர்ச்சி...

ஆனால் தமிழ் மக்கள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். அசாத் மௌலானாவைப் பொறுத்த வரையில் அவர் இன்று, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடந்த நேரம் தான் இவர்கள் தான் முகங்கள் என்று கூறியதாகக் கூறுகின்றார். இலங்கையைப் போன்றதொரு நாட்டில் நான் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருகிறேன் எனக் கூறியிருந்தால் அவர் உயிருடன் இருந்திருப்பாரா என்பதும் கேள்விக்குறியே.

ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையுடன் தொடர்புடைய ஒருவர் மாமா என்று கூறுகின்றார்கள். அவர் அண்மையில் ஹார்ட் அட்டக் மூலமாக சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்திருக்கின்றார். அசாத் மௌலானா ஒரு நீதியானவர் சரியானவர் அவர் ஒரு மாமனிதர் என்றெல்லாம் நாங்கள் கூற வரவில்லை. பிள்ளையானை விசாரிக்கும் போது அவரையும் விசாரணை செய்யுங்கள்.

**கேள்வி : பிள்ளையான் அவர்களைப் பொறுத்தவரையில் தான் ஒரு முதலமைச்சராகவிருந்தவர். சிறையிலிருந்தபோதிலும் அதிகூடிய வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றவர். மக்கள் மத்தியில் செல்வாக்கு மிகுதியாகப் பெற்றிருக்கிறார் என்ற நிலை அவருக்கு இருக்கிறது. தான் என்ன செய்தாலும் மக்கள் அவருக்கு வாக்களிப்பார்கள் என்கிற நிலையிலேயே அவரும் அவரது கட்சித் தொண்டர்களும் இருக்கிறார்கள்.?**

பதில் :- அண்மையில் நான் கேள்விப்பட்டதொரு விடயத்தினை இங்கு கூறுகின்றேன். உயர்மட்டக் கூட்டமொன்றில் அவருக்கு மிக நெருக்கமாக இருக்கின்ற இளைஞர் ஒருவர். இந்த முறை வாக்குகள் கிடைப்பதில் பாரிய பின்னடைவு இருக்கிறது. சிறையிலிருந்தபோது நீங்கள் இவ்வாறான விடயங்களைச் செய்துவிட்டீர்கள் என்கிற அவப்பெயர் மக்கள் மத்தியில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். இது அங்கு நடந்த சம்பாசனை. அதாவது கடந்த தேர்தலில் 20 கோடி ரூபா செலவழித்ததாகவும் நான் முதலமைச்சராகவிருந்த போது மக்களுக்குச் செய்திருக்கின்றேன். எனினும் மக்கள் என்னைத் தோற்கடித்துவிட்டார்கள்.

பின்னர் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றேன் அதற்குக் காரணம் நான் இவ்வளவு தொகை பணத்தை செலவு செய்திருக்கிறேன். அடுத்த முறை தேர்தல் வரும்போது நான் முன்பை விட இரு மடங்கு செலவு செய்வதற்கான ஏற்பாடுகள் இருப்பதாகக் கூறினாராம்.

அதாவது தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை தேர்தல் காலத்தில் 5000.00 ரூபாய் பணம் கொடுத்து வாக்கு பெறும் கலாச்சாரம் போல, வட கிழக்கில் இல்லை.

ஆனால் தேர்தல் நெருங்க நெருங்க கிராமங்களில் இருக்கும் தேவைகளைப் பார்த்து பூர்த்தி செய்து கொடுப்பது.

ஆகவே அவ்வாறான வேலையைச் செய்து அவர் மீண்டும் தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற நிலைப் பாட்டில் இருக்கிறாரா என்பது தெரியாது.

தொடரும்...

**நேர்காணல் : இரணியன்**

---

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் சவாலை ஏற்றக்கொள்ள பிரேமதாச முன்வரவில்லை என்பதை ஜனாதிபதி நாடாளுமன்றத்திலும் வெளியிலும் எண்ணற்ற தடவைகள் கூறியிருப்பார்.

### மஹிந்தவின் அறிக்கை

இது இவ்வாறிருக்க, பொருளாதார நெருக்கடிக்கு தங்களது நிருவாகத்துக்கு இருந்த பொறுப்பின் காரணமாக மக்கள் மத்தியில் மீண்டும் ஆதரவைத் திரட்டுவதில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கிவந்த ராஜபக்ஷர்களுக்கு அண்மைய உயர்நீதிமன்றத் தீர்ப்பு மேலும் பின்னடைவாக அமைந்தது. அந்தத் தீர்ப்பின் விளைவாக தங்களது எதிர்கால அரசியலுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை உணர்ந்த அவர்கள் இப்போது பொருளாதார நெருக்கடிக்கு தாங்கள் முற்றிலும் பொறுப்பு அல்ல என்ற பிரசாரங்களை முன்னெடுக்கவேண்டிய பெரும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஏனைய ராஜபக்ஷர்களை விட மஹிந்த ராஜபக்ஷவே இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. அந்தக் குடும்பத்தின் பிரதானமான அரசியல் முகமாக அவரே இன்னமும் விளங்குகிறார். வேறு எந்த ராஜபக்ஷவாலும் பல வருடகால அரசியல் ஈடுபாட்டுக்குப் பின்னரும் கூட அவரின் பாத்திரத்தை வகிக்கக்கூடிய நிலைக்கு கிட்டவும் வர முடியவில்லை. மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்தை உறுதிசெய்து கொள்வதற்காக தங்களது ஆட்சிக்காலச் செயற்பாடுகளை நியாயப்படுத்தவேண்டிய தேவை மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கிறது. தனது பதவிக்காலத்தில் அதாவது 2006 - 2014 காலப்பகுதியில் உறுதிவாய்ந்த பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டிருந்ததாகக் கூறி அவர் கடந்த வாரம் 'இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மூலங்கள்' என்ற தலைப்பில் நீண்ட அறிக்கையொன்றை வெளியிட்டார்.

நிதியமைச்சராக இருந்தபோது நாடாளுமன்றத்தில் பட்ஜெட்டுக்களை சமர்ப்பித்த சந்தர்ப்பங்களில் புள்ளி விபரங்களை மஹிந்த ராஜபக்ஷ கையாண்டிருந்தாலும், மற்றும்படி அவரது பேச்சுக்களிலோ அல்லது அறிக்கைகளிலோ வழமையாக அவர் புள்ளிவிபரங்களில் கவனம் செலுத்துவதில்லை. அவரின் பேச்சுக்கள் பெரும்பாலும் ஜனரஞ்சகமானவையாகவே இருக்கும். ஆனால், இந்த அறிக்கை முற்றிலும் புள்ளிவிபரங்களைக் கொண்டதாக இருக்கிறது. 2014 செப்டெம்பரில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடுகள் பொதுவில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட அதிகமாக இருந்ததாகவும் அன்றைய அண்மைய வருடங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்ட இலங்கை மேல் மத்தியதர வருமானத்தையுடைய நாடுகளின் அணியில் இணைவதை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது என்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விரைவாக வளர்ச்சியடைந்து வரும் முன்னரங்க ஆசிய பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குகிறது என்றும் கூறப்பட்டிருந்ததை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கும் அவர் 2015 ஜனவரியில் மிகவும் துடிப்பான ஒரு பொருளாதாரத்தையே தான் விட்டுச் சென்றதாகக் கூறியிருக்கிறார்.

மீண்டும் 2019 நவம்பரில் பிரதமராக பதவியேற்றபோது தங்களது அரசாங்கம் ஏற்கெனவே பெரும் பின்னடைவைக் கண்ட ஒரு பொருளாதாரத்தையே கையேற்க வேண்டியிருந்தது என்று கூறியிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ அத்தகைய ஒரு பலவீனமான நிலையிலேயே இலங்கையை கொவிட் - 19 பெருந்தொற்று தாக்கியது என்று குறிப்பிட்டார். "பொருளாதாரம் தொடர்பான எந்தவொரு விவாதத்திலும் ஆள்வீத நிகர உள்நாட்டு உற்பத்தியே மிகவும் அடிப்படையான பொருளாதார குறிகாட்டி என்பதை கவனத்தில் எடுக்கவேண்டியது முக்கியமானதாகும். 2006 - 2014 காலப்பகுதியில் எனது அரசாங்கத்தில் இலங்கையின் ஆள்வீத நிகர உள்நாட்டு உற்பத்தி சுதந்திரத்துக்கு பின்னர் பதவியில் இருந்த சகல அரசாங்கங்களின் காலத்தினதும் கூட்டுமொத்த நிகர உள்நாட்டு உற்பத்தியின் இரு மடங்கிற்கும் அதிகமானதாகும். அதனால் மக்கள் தங்களது தீர்மானங்களை கூச்சலையும் பொய்களையும் பிரசாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு அல்ல உகந்த தரவுகளையும் விளக்க விபரங்களையும் அடிப்படையாக வைத்தே எடுக்கவேண்டும். 2015 ஜனவரியில் செய்த அரசியல் தவறைப் போன்ற இன்னொரு தவறை இலங்கை தாங்கமாட்டாது" என்று அவர் தனது அறிக்கையில் இறுதியாகக் கூறியிருக்கிறார். அவரது இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெருவாரியான புள்ளிவிபரங்களை இந்தக் கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருந்த தருணம் வரை எவரும் நிராகரித்துப் பதில் அறிக்கை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில அரசியல் அவதானிகளையும் அறிக்கை தடுமாற வைத்திருக்கிறது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் தன்னைத் தோற்கடித்து செய்த அரசியல் தவறை மீண்டும் செய்யவேண்டாம் என்று நாட்டு மக்களிடம் விடுத்த வேண்டுகோளின் மூலமாக மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்ற செய்தியை புரிந்துகொள்வதில் எவருக்கும் சிரமமிருக்காது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் அதன் வேட்பாளரைக் களமிறக்கும் என்றே ராஜபக்ஷர்களும் அவர்களின் விசுவாசிகளும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்சியின் சார்பில் நிறுத்தப்படக்கூடிய வேட்பாளர் ஒரு ராஜபக்ஷவைத் தவிர வேறு எவருமாக இருப்பதற்கு பெரும்பாலும் வாய்ப்பு இல்லை. தங்களது மக்கள் செல்வாக்கு மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதால் தாங்களே நேரடியாக இந்த தடவை களமிறங்காமல் தங்களது விசுவாசிகளில் ஒருவரை (தம்மிக்க பெரேரா போன்றவர்களை) போட்டியிடவைப்பதற்கும் அவர்களுக்கு யோசனை இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் அடிபடுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை பொதுஜன பெரமுன ஆதரிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவிய கட்டம் ஒன்று இருந்தது. அந்த நிலை இப்போது இல்லை. அடுத்துவரும் மாதங்களில் இலங்கை அரசியலில் பல நாடகபாணி நிகழ்வுகளை நிச்சயம் எதிர்பார்க்கலாம். இத்தகைய ஒரு பின்புலத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள் தொடர்பில் கடந்த வாரம் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையில் 'சிற்றிசன் சில்வா' பத்தியில் இரு வாரங்களுக்கு முன்னர் தென்னமெரிக்க நாடான ஆர்ஜன்ரீனாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் இலங்கை நிலவரத்தை ஒப்பிட்டு எழுதப்பட்டிருந்த கருத்து மிகவும் சுவாரஸ்யமானதாகவும் சிந்தனையை தூண்டுவதாகவும் இருந்தது. "கடந்த வாரம் ஆர்ஜன்ரீனாவில் நடந்ததை நாம் மனக்கலக்கத்துடன் நோக்கவேண்டியிருக்கிறது. ஒப்பீட்டளவில் அனுபவமில்லாத ஒரு பொருளியலாளரான ஜாவியர் மில்லீயை அந்நாட்டு மக்கள் தங்களது புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்திருக்கிறார்கள். அவரை கிறுக்கன் (Madman) என்றும் அழைப்பார்களாம். "மில்லீக்கு ஒரு அமைச்சராகவோ அலலது ஆளுநராகவோ பதவி வகித்த முன்னனுபவம் எதுவும் கிடையாது. ஆக இரு வருடங்கள் மாத்திரமே அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். கன்சர்வேட்டிவ் மற்றும் பெரோனிஸ்ட் முகாம்களைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தங்களது நாட்டை தவறாக ஆட்சிசெய்து பொருளாதாரத்தை நாசமாக்கிவிட்டார்கள் என்று கண்ட ஆர்ஜன்ரீன மக்களுக்கு இறுதியில் அனுபவம் குறைந்த மில்லீயே தெரிவாக அமைந்தார்.

"இலங்கையைப் போன்று ஆர்ஜன்ரீனாவும் கடுமையான பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. தங்களது வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டமுடியாதவர்களாக மக்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள். இரு பாரம்பரிய அரசியல் முகாம்களையும் சேர்ந்த தலைவர்களுக்கு எதிராக மில்லீ தொடுத்த கடுமையான பிரசாரங்கள் மக்களின் உணர்வுகளுடன் ஒத்துப்போனது. பாரம்பரிய அரசியல் தலைவர்களை வாக்காளர்களை கொள்ளையடிப்பவர்கள் என்று அவர் சாடினார். "மாறிமாறி பச்சையையும் நீலத்தையும் தெரிவுசெய்து எந்த நன்மையையும் காணாத எம்மைப் போன்றே ஆர்ஜன்ரீன மக்களும் இரு பிரதான அரசியல் முகாம்கள் மீதும் அதிருப்தியடைந்து விட்டர்கள். அவர்களுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது.

"பழைய தலைவர்கள் மத்தியில் இருந்துஒருவரை மீண்டும்தெரிவுசெய்வதன் மூலம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கப்போவதில்லை என்பதை உணர்ந்த அந்நாட்டு மக்கள் பழைய முகாம்களுக்கு வெளியில் இருந்து ஒருவரை தங்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்திருக்கிறார்கள். "அடுத்த வருடம் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் ரணிலை விடவும் பேச்சாற்றலால் மக்களைக் கவரக்கூடிய ஒருவருக்கு நாம் வாக்களிப்போமா? அல்லது தற்போது இருப்பவர்களில் குறைந்தளவுக்கு ஆட்சேபனைக்குரிய ரணிலுக்கு வாக்களிப்போமா? "பாரம்பரிய அரசியல் முகாம்கள் மீது வெறுப்படைந்த ஆர்ஜன்டரீன மக்களைப் போன்று பொருளாதாரத்தை நாசமாக்கிய ஊழல்காரர்களைப் பழிவாங்குவதற்கு தீவிரவாத சிந்தனைகொண்ட வெளியாள் ஒருவருக்கு மக்கள் வாக்களிப்பார்களா?.

# “மலையக” தேசிய அடையாளத்தின் - பரிணாமங்களும், பரிமாணங்களும்



கடந்தவாரத் தொடர்ச்சி...

ஒப்பாரிக் கோச்சிக்குப் பின்னால் அழுதுபுரண்டோடிய சொந்தங்கள் மலையகத்தில் இருந்து மாத்திரமல்ல கொழும்பிலிருந்தும், களுத்துறையிலிருந்தும், காலியிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் தான். இரண்டாவது பெரும்பான்மை இனமாக சீனர்கள் ஆகியிருப்பார்கள். சூரியன் மறையாத சாம்ராஜ்யமாக இருந்த பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் பல நாடுகள் இருந்தன. சில நாடுகளில் அவர்கள் வருமானத்துக்காக மேற்கொண்ட விவசாய மற்றும் கட்டுமானப் பணிகளுக்காக குறைந்த கூலிக்கு ஆள் பிடித்தனர். அவ்வாறு சில நாடுகளில் குறைந்த கூலிக்கு ஆள் பிடிக்க முடியாத போது அவர்கள் தெரிவு செய்த முக்கிய இரு நாடுகள் சீனாவும், இந்தியாவும், இந்த இரு நாடுகளில் இருந்து தான் பெருமளவு கொத்தடிமைகளை ஆசைவார்த்தை காட்டி, ஏமாற்றி கூட்டிச் சென்றனர்.

கரீபியன் நாடுகளுக்கும், தென்னாபிரிக்கா, மொரீசியஸ், பிஜித் தீவுகளுக்கும் கரும்புத் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இந்தியர்கள் மாத்திரமல்லர், சீனர்களும் தான். அதுபோல இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் தேயிலைத் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் தென்னிந்தியர்கள் மட்டுமல்ல, சீனர்களும் தான். மலேசியாவில் அங்கிருக்கும் சுதேசிய சீனர்களுக்குப் பதிலாக இந்தியர்களைக் கொண்டு வந்தது போல, இலங்கையில் சுதேசிய சிங்களவர்களுக்குப் பதிலாக தென்னிந்தியத் தமிழர்களை தெரிவு செய்தார்கள். அதுமட்டுமல்ல இவர்களை கொத்தடிமைகளாக நிர்வகிப்பதென்றால் தமது சொந்த மண்ணிலிருந்து தனித்து பிடுங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது பிரிட்டிஷாரின் அணுகுமுறையாக இருந்தது. மலேசியாவில் சீனர்களை தெரிவு செய்யாமல் இருந்ததற்கான காரணமே அவர்களின் பூர்வீகம் அருகாமையிலேயே இருந்தது தான்.

இலங்கைக்கு தென்னிந்தியாவில் அல்லாமல் சீனாவிலிருந்து தான் பெருந் தோட்டங்களுக்கு கூலிகளை அழைத்துவரும் திட்டத்தைக் கொண்டிருந்தார்கள் ஆங்கிலேயர்கள். 1850களில் சீனாவிலிருந்து ஒரு கூலித் தொழிலாளரை வாங்க 25 பவுண்டுகள் செலவழிந்த அதே வேளை ஒரு இந்தியக் கூலியை வாங்க 15 பவுண்டுகள் போதுமானதாக இருந்திருக்கிறது.

இலங்கையின் சுதந்திரத்துக்கு ஈராண்டுக்கு முன்னர் தான் 1946இல் குடிசன மதிப்பு வெளியானது. இரண்டாம் உலக யுத்த நெருக்கடி காரணமாக 1941 ஆம் ஆண்டு எடுக்க வேண்டிய குடிசன மதிப்பு தான் இவ்வாறு ஐந்தாண்டுகள் கழிந்து வெளியானது. இந்த அறிக்கையில் இந்தியத் தமிழர்களின் சனத்தொகை 780,589 என்று குறிப்பிடப்படும் அதேவேளை சீனர்களின் சனத்தொகை 497 பேர் என்கிற குறிப்புகளும் உள்ளன. இவர்கள் நகரங்களில் சிறு கடைகளையும், சிற்றுண்டிச் சாலைகளையும் நடத்தி வந்தவர்களாகத் தான் இருந்தார்கள்.

கசந்த கோப்பி கொத்தடிமைகள் (Bitter berry Bondage) நூலை எழுதிய டொனோவன் மொல்ட்ரிச் (Donovan Moldrich) அந்த நூலில் இலங்கையில் சீனத் தொழிலாளர்களை கொண்டு வருவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் குறித்து தனியான அத்தியாயத்தை எழுதியுள்ளார். டச்சு காலத்திலும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சீனர்களைப் பற்றியும் குறிப்புகளை எழுதியுள்ள அவர் ஆங்கிலேயர் காலத்தில் என்னென்ன பணிகளில் அவர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள் என்கிற விபரங்களையும் தருகிறார்.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காலியில் கோட்டைக்கு அருகே சிறிய சீனர்கள் வாழ்ந்த ஒரு காலனி ஒன்றும் இருந்தது என்றும் பூந்தோட்ட பராமரிப்பில் வல்லவர்களாக அவர்கள் இருந்ததால் அப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள் என்றும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்டியைக் கைப்பற்றிய காலத்தில் கவர்னராக இருந்தவர் சேர் ரொபர்ட் பிரவுன்றிக். (Sir Robert Brownrigg). முதலாவது இலங்கை ரெஜிமென்டின் கப்டனாக இருந்த எல்.டி புஷ்ஷ (Capt.L.De Bussche) “கண்டி மாகாணம் இந்த சொர்க்கத்தின் ஆசனமாக ('the scat of paradise”) ஆகப்போவதால் அதை மேற்கொள்வதற்கு சிறந்த தொழிலாளர்கள் தேவை என்றும் அதற்கு திறன்மிக்கவர்களாகவும், அமைதியானவர்களாகவும் இருக்கக்கூடியவர்கள் சீனர்களே என்கிற கருத்தை முன்வைத்தார். சீனர்கள் சிங்களவர்களை விட பொருத்தமானவர்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். ஏற்கெனவே அக் கேப்டன் ஜாவாவில் பணிபுரிந்த போது சீனர்களின் வினைத்திறனைக் கண்டவர். ஆனால் ஆளுநர் பிரவுன்றிக் அதை மறுத்துவிட்டார். அவருக்கு பின் வந்த ஆளுநர் எட்வர்ட் பார்ன்சும் அக் கேப்டனின் முன்மொழிவை ஏற்கவில்லை. சீனர்கள் சனத்தொகையை மட்டுமே அதிகரித்துக்கொண்டு இருக்கப் போகிறார்கள் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது.

பின்னர் சீன தேயிலை இலங்கையில் பயிரிடத் தொடங்கிய போது தேயிலை உற்பத்தியில் கைதேர்ந்த சீனர்களையே அதில் ஈடுபடுத்துவதே சரியானது என்கிற கருத்து தொடர்ச்சியாக உரையாடப்பட்டது. ஆனால் இறாத்தல் தேயிலை உற்பத்தி செய்வதற்கு 5 பவுண்டுகள் வரை செலவாகலாம் என்று கணித்ததன் பின்னர் அந்த யோசனையை மொரிஸ் வோர்ம் (Maurice Worms) கைவிட்டார். லாபத்தை ஈட்ட கடினம் என்கிற முடிவுக்கு வந்தார்கள். டொரிங்டன் (Torrington) ஆளுநராக வந்தபோது சீனர்களை பெருந்தோட்டங்களுக்கு மட்டுமன்றி வடக்கு, வட மத்திய, வட மேற்கு மாகாணங்களில் நெல் பயிர்ச்செய்கையிலும் ஈடுபடுத்துவதற்கான சாத்தியங்களை ஆராய பணித்தார்.

ஹொங்கொங்கில் வெளியுறவுத் துறை செயலாளராக இருந்த ஜோன்சன் டொரிங்டனுக்கு இது பற்றிய தனது அபிப்பிராயத்தை எழுதி அனுப்பியிருக்கிறார். சீனர்களை தொழிலுக்கு அமர்த்துவதில் உள்ள பிரதானமான நான்கு காரணங்களை அவர் அதில் முன் வைக்கிறார்.

இரண்டு மூன்று தமிழர்கள் (மலபாரிகள்) உண்ணும் உணவை இரண்டே இரண்டு சீனர்கள் உண்டு விடுவார்கள். தமிழர்களுக்கு அவசியப்படாத ஆடம்பரத் தேவைகள் சீனர்களுக்கு இருக்கிறது. சீனாவிலிருந்து சீனர்களை இலங்கைக்கு கொண்டு போகும் செலவை அரசாங்கமோ, தோட்ட உரிமையாளர்களோ ஏற்க வேண்டிவரும். ஆனால் தென்னிந்தியத் தொழிலாளர்கள் அவர்களின் செலவிலேயே வந்து விடக் கூடியவர்கள். இன்னொரு நான்காவது காரணத்தையும் அவர் குறிப்பிடுகிறார். அதாவது தமது மனைவி குழந்தைகளை விட்டு தூரத்துக்குச் சென்று பணியாற்றுவது சாத்தியமில்லை. சீனர்களை கொண்டு வரலாமா என்கிற வாதம் தொடர்ந்தும் இழுபறிபட்டது. அங்கிருந்து ஆண்களைக் கொண்டு வந்தால் அவர்கள் இலங்கை சிங்களப் பெண்களை திருமணம் முடித்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நிரந்தர வதிவிடமாக இலங்கையை ஆக்கிக் கொள்வார்கள். சீனர்கள் சிங்களவர்களை விடவும், இந்தியர்களை விடவும் உடல் உழைப்பில் திறமானவர்கள் என்றும் ஐரோப்பியர்களை விட வெப்பத்தைத் தாங்கக் கூடியவர்கள் என்றும் ரிக்ஸ் (C.R.Rigg) பரிந்துரைத்திருக்கிறார்.

கோப்பி பயிர்ச்செய்கை அமோகமாக வளரத் தொடங்கியபோது கண்டியில் பாதைகளை அமைப்பதற்காக தச்சர்கள், கொத்தனார்கள், கொல்லர்கள் என்போரை சீனாவிலிருந்து வரவழைக்கலாம் என்று (Provincial Road Committee) வீதி அமைப்பதற்கான கொமிட்டி அரசாங்கத்திடம் கோரியது. 1860 இல் சீனாவிலிருந்து கிழக்கிந்தியத் தீவுகளுக்கு சீனர்களை ஏற்றிக்கொண்டு முதலாவது கப்பல் புறப்பட்டுவிட்டது என்றும் ஏனைய இடங்களுக்கும் இந்தியத் தொழிலாளர்களுக்குப் பதிலாக சீனர்கள் அவசியப்படுகிறார்களா என்று The Examiner பத்திரிகை கேள்வி எழுப்பியது. அப்பத்திரிகைக்கு எழுதிய ரோவ்டன் பவர் (Rowdon Power) “ஒரு சீனர் திறமையாகவும், விவேகமாகவும் கண்காணிப்பாளராக இருக்கக் கூடியவர் என்பதால் இரண்டு அல்லது மூன்று தமிழ் தொழிலாளர்களின் வேலையை ஒருவரே செய்யக் கூடியவர்” என்றார். China Mail என்கிற பத்திரிகையை ஆதாரம் காட்டி அப்பத்திரிகை வெளியிட்ட ஒரு அட்டவணையும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதுவரை சீனாவிலிருந்து ஏனைய ஆங்கிலேய காலனித்துவ நாடுகளுக்கு கூலித் தொழிலாளர்களாக அனுப்பப் பட்டவர்களின் எண்ணிக்கை அது.

**சீனாவிலிருந்து அடிமைகள் :**

போர்னியோ 350,000,
ஜாவா 125,000, சிங்கப்பூர் 50,000,
மலாக்கா 30,000, சியாம் 50,000,
இந்தியா 5,000, ஆஸ்திரேலியா 70,000, கலிபோர்னியா 50,000
பெருந்தோட்டங்களுக்கு வெளியில்...

அன்றைய இலங்கையில், அரசாங்கத் துறைத் தொழிலாளர்களுக்கு பொதுவாக தங்குமிடங்கள் வழங்கப்பட்டன. ஆனால் கொழும்பு மற்றும் ஒரு சில பெரிய நகரங்களைத் தவிர, தொழிலாளர்கள் தங்கள் சொந்த தங்குமிடங்களைத் தாமாக தேடிக்கொள்ள நேரிட்டது. இருப்பினும் பிற்காலத்தில் இந்த நகர்ப்புற புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டதை விட அதிகமாக இருந்தது. 1900களின் ஆரம்பத்தில் தொழிலாளர்கள் தொடர்பாக நிலுவையில் இருந்த அனைத்து ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்பட்டன. மேலும் 1922 ஆம் ஆண்டின் இந்திய குடியகல்வுச் சட்டத்தின் (IEA) VII படி இலங்கைக்கான ஒப்பந்த குடியேற்ற முறை அங்கீகாரத்தை இழந்தது.

1795ல் ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு முறையான அரசுக் கட்டடங்களோ, முறையான சாலைகளோ இருக்கவில்லை. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்த கட்டிடங்கள் பெரும்பாலும் ஒல்லாந்தர்களால் கட்டப்பட்ட கோட்டைகளும் தேவாலயங்களும், தங்குமிடங்களும் தான். வீதிகள் முக்கிய நகரங்களுக்கு இடையில் மட்டுமே இருந்தன. அவை காடுகள் வழியாக அகற்றப்பட்டு உருவாக்கப்பட்டவை. அவை வறண்ட காலங்களில் கரடுமுரடான போக்குவரத்திற்கு மட்டுமே ஏற்றவை.

**தொடரும்...**

**- என்.சரவணன் -**

# மாவீரர்களுக்குரிய மதிப்பை உலகு கொடுக்கவும், ஈழத்தமிழர் வெளியக தன்னாட்சியுரிமையை ஏற்கவும் உழைப்போம்

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

ஒரு சிறிய எண்ணிக்கையான விடுதலைப் போராளிகளின் மேல் பாரிய பெரும் படையெடுப்பு நடத்தப்படுகையில் அதனைத் தடுத்து நிறுத்த மேற்கொள்ளப்பட்ட யுத்த தந்திரோபாயங்கள் அனைத்துலக முறைமைகளுக்கு எதிரானது என்றால் அதனைச் சுட்டிக்காட்டி நெறிப்படுத்தாமல் முழு ஈழத்தமிழர்களையும் தொடர்ந்தும் இன்று வரை சிறிலங்கா இன அழிப்பு செய்ய அனைத்துலக வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் சிறிலங்காவுக்குத் தொடர்ச்சியாக ஆதரவு அளிப்பது உலக வரலாற்றில் இவர்களும் ஈழத்தமிழர் இன அழிப்பின் குற்றவாளிகள் என்ற பதிவை இன்றில்லாவிட்டாலும் என்றோ ஏற்படுத்தவே செய்யும்.

1796 முதல் 1972 வரை ஈழத்தமிழர்கள் தங்களின் இறைமைக்குத் தங்களை மேலாளராகக் கொண்டு ஆட்சி செய்த பிரித்தானிய காலனித்துவம் தங்களை சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறைமைக்குள் இலங்கை அரசு என்ற புதிய ஆட்சி முறைமைக்குள் 04.02.1948 இல் அடக்கியதால் உருவானதே சிங்கள பௌத்த பேரினவாதப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சி எனத் தெளிவாக நிறுவுகின்றனர்.

இந்தப் பாராளுமன்றக் கொடுங் கோன்மைக்கு எதிராக முதலில் அனைத்து சனநாயக வழிகளிலும் முயன்று தங்கள் அரசியல் உரிமைகளை பெற எடுத்த எல்லா செயற்பாடுகளையும் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தாலும் இனஅழிப்பு. இனத்துடைப்பு. பண்பாட்டு இனஅழிப்பு என்பவற்றையே ஆட்சிக் கொள்கையாகவும் கோட்பாடாகவும் கொண்ட ஆட்சி முறையாலும் சிறிலங்கா தடுத்தது என்பதையும் ஈழத்தமிழர்கள் உலகுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்.

சோல்பரி அரசியல் அமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கை அரசு அந்த அரசியலமைப்பின் 29(2) பிரிவால் இலங்கையில் சிறுபான்மை மதங்களுக்கும் இனங்களுக்கும் அளித்த பாதுகாப்பால் ஈழத்தமிழர்களின் இறைமையின் மீயுயர் ஆட்சியாளர்களாக 1972 வரை பிரித்தானிய மகாராணி அவர்களே விளங்கி வந்தார்.

இந்த அரசியலமைப்புப் பாதுகாப்பை வன்முறைப்படுத்தி 22.05.1972 முதல் அரசற்ற தேச இனமாக ஈழத்தமிழர்களை சிறிலங்கா மாற்றி இனங்காணக்கூடிய அச்சத்தையே ஈழத்தமிழர்களுக்கான நாளாந்த வாழ்வாக தனது படைகள் மூலம் சிறிலங்கா கட்டமைத்த அனைத்துலகச் சட்டவிரோத செயலில் இருந்து விடுபட்டு வாழத் தங்களுக்கான தன்னாட்சிப் பிரகடனத்தை 1975இல் அக்காலத் தங்களின் அரசியல் தலைவர் சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் தனக்கு காங்கேசன்துறை அடையாளக் குடியொப்பத்தில் கிடைத்த ஆணையின் அடிப்படையில் விடுத்து சிறிலங்காப் பாராளுமன்ற ஆட்சியை விட்டு சனநாயக முறைமையின் வழி விலகினார்.

1977ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்னும் சுதந்திரத்திற்கான குடியொப்பம் அளித்த தங்களின் தொன்மைத் தாயகத்தை மீள்விக்கும் மக்கள் ஆணையினை நடைமுறைப்படுத்த 1978 முதல் 2009 வரை தங்களுக்கான நடைமுறையரசை சீருடை அணிந்த முப்படைகளினது பாதுகாப்பில் தங்களுக்கான சட்டவாக்க சட்ட அமுலாக்க நிர்வாக ஆட்சிமுறைகளுடன் ஈழத்தமிழர்கள் தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் தலைமையில் செயற்படுத்தினர். அதனை எதிர்த்த சிறிலங்காவின் படைகளுக்கு 1977 குடியொப்ப விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்த முறைமைக்கு ஏற்ப அவர்களுக்கு எதிராகப் போராடியவாறு தங்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் உலக ஏற்புடைமையை எதிர்பார்த்து நடைமுறையாட்சியை முன்னெடுத்து வந்தனர்.

இந்த 31 ஆண்டுகால உலக விடுதலைப் போராட்டங்களில் ஒன்றான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்த தமிழீழத் தேச விடுதலைப் போராளிகளின் போற்றுதல் நாள் தான் மாவீரர் நாள். உண்மையில் இந்நாள் உலக மாவீரர் நாளாகவும் உலகால் கொண்டாடப்பட வேண்டிய நாள். இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் 1989 முதல் ஈழத்தமிழர்களின் தேசிய நாளாகவும் மாவீர வணக்கப் பண்பாட்டுப் பெருவிழாவாகவும் தொடங்கப் பெற்ற கார்த்திகை 27 இன்றுவரை ஈழத்தமிழரின் தாயகத்திலும் உலகெங்கும் ஈழத்தமிழர்கள் அரசியல் புகலிடம் பெற்று அந்நாடுகளின் குடிகளாக வாழும் நகரங்களிலும் தமிழகத்திலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இது தமிழரின் பண்பாட்டு வரலாற்றின் நீட்சி என்பதை புதுவை இரத்தின துரை அவர்களின்.

"தீயிடும் ஆரிய மரபழித்த
நடுகல் வழிபாடிது
தமிழரின் பழைய மரபு புதுப்பிக்கப்படுகிறது
ஈமத்தாழியும்
நடுகல்லும்
வெறியாட்டுமே நமக்கிருந்த வழிபாடு.

வெற்றி வீரர்கள் வீரத்தெய்வங்களாயினர்
இவர்கள் கற்பனையற்ற கடவுளர்
பகைவரும் திசை பார்த்து
எல்லைப் புறங்களில் இவர்களுக்கு
கோயிலிருந்தது
சாவடைந்த பின்பும்
இவர்களுக்கோர் சத்தியிருந்தது
வீரமாதேவியின் விழிகள் திறந்தேயிருந்தன
இன்றும் நிலத்தில் விதைக்கின்றோம்
எங்கள் நிர்மல ரூபங்களை
இது விடுதலைக்கான விதைப்பு
கட்டறுப்புக்கான விலை கொடுப்பு.

உழவும் விதைப்பும்
நாளை நமக்கெனவரும் அறுவடைக்கானது
நம்பிக்கையின் ஒளித்திசையில் பயணம்"

என்னும் கவிதா வரிகளால் உலகிற்கு மாவீரர் நாள் பண்பாட்டு நாள் என்பதையும் மாவீர வழிபாடு தமிழரின் நம்பிக்கை மதச்சுதந்திரங்களின் அடிப்படையில் அவர்களுடைய அடிப்படை மனித உரிமை என்பதையும் தெட்டத் தெளிவாக்குகின்றார்.

எனவே சிறிலங்கா மாவீரர் நாளை கொண்டாடுவதைத் தடுக்க எடுக்கும் முயற்சிகள் அத்தனையும் சிறிலங்காவுக்கு ஈழத்தமிழர்களைத் தனது குடிகளாக ஆளும் எண்ணமோ நோக்கோ இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது.

இந்த உண்மையை உலகுக்குத் தெளிவுபடுத்தி ஈழத்தமிழர்கள் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் மீளவும் தங்களுக்கான இறைமையின் அடிப்படையிலும் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் பின்னணியிலும் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தை அமைத்திட அவர்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் உலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் உதவ உழைப்பதே மாவீரர்களுக்கான உண்மையான வீரவணக்கமாக அமையும்.

மூத்த அரசியல் ஆய்வாளர்
சூ.யோ.பற்றிமாகரன்

# "வன்முறையற்ற சமூகம் மகிழ்ச்சியான உலகு" வீதி நாடகம்



அண்மைக்காலமாகபிரதேசசெயலகங்களின் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவிற்கு சிறுவர் துஷ்பிரயோகங்கள், வீட்டு வன்முறை, குடும்ப பிரச்சினைகள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பாக அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இவற்றைக் கருத்திற்கொண்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக மட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் விழிப்புணர்வுகளை அதிகரிக்க வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

அந்தவகையில், "வன்முறையற்ற சமூகம் மகிழ்ச்சியான உலகு" எனும் கருப்பொருளின் கீழ் வீதி நாடகம் மாணவ மற்றும் சமூக பங்கேற்புடன், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் கிராமங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வீதி நாடகமானது, இறக்காமம் கமு/சது/அஷ்ரப் தேசிய பாடசாலை, இறக்காமம் கமு/சது/அல் அமீன் மகா வித்தியாலயம், இறக்காமம் கமு/சது/அஸ்-ஸபா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் புதன் கிழமை சிறப்பாக நடைபெற்றது. 2023.12. 09 ஆம் திகதி சனிக்கிழமை இறக்காமம் - 02, வரிப்பத்தான்சேனை 02, 03, ஆகிய பிரதேசங்களிலும் இந்த வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது.

இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவும், இஸ்லாமிக் ரிலீப் நிறுவனமும் இணைந்து இந்நிகழ்வினை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நூருல் ஹுதா உமர் )

# நவம்பர் மாதத்திற்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனை யார்? வெளியானது பட்டியல்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்து கௌரவித்து வருகிறது. அதன்படி நவம்பர் மாதத்திற்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகளின் பெயர்களை ஐசிசி அறிவித்துள்ளது.

அதில் நவம்பர் மாதத்திற்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில்இந்தியாவில்நடைபெற்ற50ஓவர் உலகக்கோப்பை தொடரில் அசத்திய மூன்று வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். அதன்படி உலகக்கோப்பை தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய பந்து வீச்சாளரான இந்தியாவை சேர்ந்த முகமது ஷமி மற்றும் ஆஸ்திரேலிய உலகக்கோப்பையை வெல்வதற்கு உதவிய முக்கிய வீரர்களான டிராவிஸ் ஹெட் மற்றும் கிளென் மேக்ஸ்வெல் ஆகியோர் நவம்பர் மாதத்திற்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அதேபோல் சிறந்த வீராங்கனை விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் வங்காளதேசத்தை சேர்ந்த வீராங்கனைகளான நஹிதா அக்தர். பர்கானா ஹோக் மற்றும் பாகிஸ்தானை சேர்ந்த சாடியா இக்பால் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



# உலக வலம்

## நேதன்யாகு பகிரங்க எச்சரிக்கை



ஹிஸ்புல்லா முழு அளவில் போரை தொடங்க முடிவு செய்தால், அதன் சொந்த கைகளால் பெய்ரூட்டை காசாவாகவும், தெற்கு லெபனானை கான் யூனிஸ் நகராகவும் மாற்றும் என இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு ஹிஸ்புல்லாவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 1,200 பேர் கொல்லப்பட்டதுடன் 240க்கும்மேற்பட்டோர்பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேல், ஹமாஸ் மீது போர் பிரகடனம் செய்து காசா மீது தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலில் மூர்க்கத்தனமான வகையில் தாக்குதல் நடத்தியது. இதனால் காசாவின் வடக்குப்பகுதி சீர்குலைந்துள்ளது. தற்போது தெற்கு பகுதியிலும் தாக்குதலை விரிவுபடுத்தியுள்ளதனால் பாலஸ்தீன மக்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

**நேதன்யாகு பகிரங்க எச்சரிக்கை**

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்த தொடங்கியபோது, லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஹமாஸ்க்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. இதனால் ஹமாஸ் - இஸ்ரேல் இடையிலான போர் பிராந்திய போராக மாறக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டது. எனினும் எகிப்து, ஈரான் மற்றும் அரபு நாடுகள் இந்த விவகாரத்தில் தலையிடவில்லை. இருந்த போதிலும் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் அவ்வப்போது ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் ஹிஸ்புல்லாவிற்கு இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் விடுத்துள்ள எச்சரிக்கையில், "ஹிஸ்புல்லா முழு அளவில் போரை தொடங்க முடிவு செய்தால், அதன் சொந்த கைகளால் பெய்ரூட்டை காசாவாகவும், தெற்கு லெபனானை கான் யூனிஸ் நகராகவும் மாற்றும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஹமாஸ் - இஸ்ரேல் மோதலை கட்டுப்படுத்த அமெரிக்கா முயற்சி மேற்கொண்டு வருகிறது. அதிபர் ஜோ பைடன் நேதன்யாகு மற்றும் ஜோர்டான் அதிபர் அப்துல்லா ஆகியோரிடம் பேசியதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

நேதன்யாகுவிடம் ஜோ பைடன் பேசும்போது, காசாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பிணைக்கைதிகள் மற்றும் மேற்கு கரையில் பாலஸ்தீனர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல், காசாவிற்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவது குறித்து பேசியதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், நேதன்யாகு ஹிஸ்புல்லாவிற்கு எச்சரிக்கை விடுத்தது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள், பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் விட்டு அழுத வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன்



உலகளவில் பல மர்மங்களை கொண்ட நாடுகளில் ஒன்றாக வடகொரியா இருந்து வருகின்றது. இந்த நாட்டின் அதிபராக கிம்ஜாங் உன் உள்ளார். பரப்பளவில் வடகொரியா என்பது மிகவும் சிறிய நாடாகும். இந்த நாட்டின் மக்கள் தொகை என்பது 2.61 கோடி மட்டும்தான் என கூறப்படுகிறது.

இந்நிலையில்தான் நாட்டில் உள்ள பெண்கள் அதிகமாக குழந்தைகளை பெற்றெடுக்க வேண்டும் எனக்கூறி மேடையில் கிம்ஜாங் உன் கண்ணீர் விட்டு அழுதார்.

வடகொரியாவில் தற்போது குழந்தை பிறப்பு விகிதம் சரிந்து வரும் நிலையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அதாவது தலைநகர் பியாக்யாங்கில் நடந்த பெண்களுக்கான நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது, நம் நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. இதனால் பெண்கள் அதிக குழந்தைகளை பெற்று கொள்ள வேண்டும். அதுதான் நம் நாட்டை பாதுகாக்கும்.

பிறப்பு விகிதம் குறைவதை தடுப்பது மட்டுமன்றி குழந்தைகளை பராமரித்து நன்றாக வளர்க்க வேண்டும். முறையாக கல்வி வழங்க வேண்டும். இதனை செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என பேசும்போது கிம் ஜாங் உன் கண்கலங்கியுள்ளார்.

**சிட்னியைச் சேர்ந்த ஹாரி கூரோஸ் (வயது 26) மற்றும் அவரது நண்பர் ஜேக் லாய்ட்ரடன் (வயது 26) ஆகியோர். 24 மணி நேரத்தில் 99 பார்களில் சென்று குடித்துள்ளனர். இதற்காக 1,500 அவுஸ்திரேலிய டொலர்கள் செலவு செய்துள்ளனர். இதன்மூலம் இவர்கள் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர். கடந்த ஆண்டு தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த ஹென்றிச் டி வில்லியர்ஸ் என்பவர் ஒரே நாளில் 78 பார்களில் குடித்ததே முந்தைய சாதனையாக இருந்தது.**

## இணைய வழி மோசடிகள் குறித்து எச்சரிக்கை



கனடாவில் இணைய வழியில் கிறிஸ்மஸ் மரங்கள் உள்ளிட்ட பொருட்களை கொள்வனவு செய்வோருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடுமுறை காலத்தில் பல்வேறு வழிகளில் மோசடிகள் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. எட்மோண்டன் பகுதியில் பெண் ஒருவர் ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்மஸ் மரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக இந்த பெண் பணம் செலுத்திய போதிலும் மரம் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. கிறிஸ்மஸ் மரம் கொள்வனவு செய்ய மேற்கொண்ட முயற்சியின் ஊடாக இந்த பெண் 1500 டொலர்களை இழந்துள்ளார்.

google தேடுதளத்தில் கிறிஸ்மஸ் மரம் குறித்து தேடிய போது பட்டியலான முதலாவது இணையதளம் என்ற காரணத்தினால் இந்த இணையதளம் நம்பகமானது என கருதி பணப்பரிமாற்றத்தை மேற்கொண்டுள்ளார். எனினும் குறித்த இணையதளத்தின் ஊடாக மோசடி செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. Adjustabletrees.com என்ற இணையதளத்தின் ஊடாக கிறிஸ்மஸ் மரமொன்றை கொள்வனவு செய்ய முயற்சித்த பெண்ணே இவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளார்.

பண்டிகை காலத்தில் வாடிக்கையாளர்களை ஏமாற்றி மோசடிகளில் ஈடுபடும் கும்பல்கள் அதிகரித்துள்ளதாக போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


## QR குறியீடு மூலம் பணப் பரிமாற்றம்



கம்போடியா - வியட்நாம் இடையே QR குறியீடு மூலம் ஸ்கேன் செய்து நாட்டின் எப்பகுதியிலும் பணப் பரிமாற்றத்தில் ஈடுபட இரு நாட்டு அரசாங்கமும் ஒப்புக்கொண்டுள்ளது. இதன் அறிமுக விழா கம்போடியாவின் சீம் ரீப் மாகாணத்தில் நடைபெற்றுள்ளது. இதில் இரு நாட்டு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர். இந்த புதிய கட்டண முறையானது பாதுகாப்பானது மற்றும் வசதியானது எனவும், எல்லை தாண்டிய பணப்பரிமாற்றத்தை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூர் நாணயப் பயன்பாட்டையும் ஊக்குவிக்கிறது. இந்த எல்லை தாண்டிய QR குறியீட்டுக் கட்டண முறையானது வாடிக்கையாளர்களையும் பொதுமக்களையும் வியட்நாமில் கம்போடிய நாணயத்தில் பொருட்களை வாங்குவதற்கும் பணம் செலுத்துவதற்கும் உதவுகிறது. அதேபோல் வியட்நாமைச் சேர்ந்தவர்கள் கம்போடியாவில் வியட்நாமின் நாணயமான டாங்கைப் பயன்படுத்தலாம். இதற்காக சுமார் 1.8 மில்லியன் கம்போடிய வணிகர்கள் வழங்கிய KHQR குறியீடுகளை ஸ்கேன் செய்து பணம் செலுத்தலாம். இதன் மூலம் இரு நாடுகள் இடையே எல்லை தாண்டிய வர்த்தகம் மற்றும் சுற்றுலா மேம்படும் என அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன. வியட்நாம் தவிர தாய்லாந்து மற்றும் லாவோஸ் நாடுகளுடனும் இந்த டிஜிட்டல் பண பரிமாற்றம் தொடர்பான QR குறியீடு லிங்கை கம்போடியா வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உளவு செயற்கைக்கோளை ஏவிய தென்கொரியா



வடகொரியா சமீபத்தில் இராணுவ உளவு செயற்கைக்கோளை விண்ணில் வெற்றிகரமாக ஏவி நிலை நிறுத்தியது. இதற்கு தென்கொரியா, அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இதற்கிடையே உளவு செயற்கைக்கோள் மூலம் அமெரிக்கா வின் வெள்ளை மாளிகை, இராணுவ தலைமையகமான பென்டகன், கடற்படை தளம் ஆகியவற்றை படம் பிடித்ததாக வடகொரியா தெரிவித்தது. மேலும் இவ்விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தைக்கு அழைத்த அமெரிக்காவின் கோரிக்கையை நிராகரித்தது. இந்நிலையில் தென்கொரியா தனது முதல் இராணுவ உளவு செயற்கைக்கோளை விண்ணில் ஏவியது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன்-9 ராக்கெட் மூலம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள விண்வெளி படைத்தளத்தில் இருந்து செயற்கைக்கோளை ஏவியது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் தென்கொரியா செய்துள்ள ஒப்பந்தத்தில் 2025ஆம் ஆண்டுக்குள் 5 உளவு செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ முடிவு செய்யப்பட்டது.

அதில் முதல் செயற்கைக் கோள் ஏவப்பட்டுள்ளது. வட கொரியாவுக்கு போட்டியாக தென்கொரியாவும் உளவு செயற்கைக்கோளை ஏவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதற்பெண் தளபதியான மேஜர் சோதியா



மைக்கேல் வசந்தி என்ற இயற்பெயருடைய. யாழ் மாவட்டத்தில் வடமராட்சி. நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவியாவார். 1984 இல் புலிகள் அமைப்பில் இணைந்துகொண்டதோடு முதலாவது பயிற்சி முகாமிற் பயிற்சி பெற்று தாயகம் திரும்பினார். புலிகளின் படையணியில் மருத்துவப்போராளியாகவும் தளபதியாகவுமிருந்தார்.

மன்னாரில் லெப்.கேணல். விக்டர் தலைமையில் நடைபெற்ற பெண் புலிகளின் முதலாவது தாக்குதல் தொடக்கம் இந்திய இராணுவத்திற்கெதிரான தாக்குதல்கள் வரை இவர் பல களங்களைக் கண்டவர். மணலாற்றுக் காட்டுக்குள் இருந்த காலத்தில் ஒரு நத்தார் தினத்தன்று சுகவீனமுற்றார். பின் 11.01.1990 அன்று சாவடைந்தார். இவரின் பெயரில் 'சோதியா படையணி' என்ற பெண்கள் படையணி 14.07.1996 அன்று உருவாக்கப்பட்டது. அதன் பின்னான அனைத்துக் களங்களிலும் அது சிறப்புறச் செயலாற்றியது. ஏறத்தாள ஐநூறு போரா ளிகளை இப்படையணி இழந்துள்ளது. தமிழீழப் போராட்ட வரலாற்றில் மேஜர் சோதியாவினது ஆளுமையும். திறமையும் இன்று வரையான மகளிர் படையணி யின் வளர்ச்சிக்கான அச்சாணி.

பச்சைப் பசேல் என்ற குளிர்மைக்காடு அது. அதுதான் எங்கள் மணலாறு. பசுமை மரங்களின் நடுவே நாம் போராளிகளாக நிமிர்ந்த நாட்கள். போராளிகள் என்ற நிமிர்வு ஒருபுறம். அண்ணனுடன் இருக்கின்றோம் என்ற தலைக்கிரீடம் ஒருபுறம். நிச்சயமாக என்னால் எம்மால் மறக்க முடியாத நாட்களாகி விட்டன.

இந்திய இராணுவக் காலப்பகுதி. ஓ! அதுதான் மேஜர் சோதியாக்காவை நாம் கண்டு பழகி. வழி நடந்த. நேசித்த காலம்.
நெடி துயர்ந்த பெண். வெள்ளையான நிமிர் தோற்றமான பெண். பல்வரிசை முழுமையாகக் காட்டிச் சிரிக்கும் மனந்திறந்த சிரிப்புடன் எம்மைப் பார்வையிட்ட அந்த இனியவர். அப்போ தலைமை மருத்துவராகக் காட்டில் வலம் வந்தவர்.

சோதியாக்கா வயித்துக்குத்து... சோதியக்கா கால்நோ... சோதியாக்கா காய்ச்சல்... சோதியாக்கா... சோதியாக்கா...
ஓம் எப்ப வருத்தம் வந்தாலும் அவவைக் கூப்பிட நேரம் காலம் இல்லை. சாப்பிட்டாலும் சரி. இயற்கைக் கடனை கழிக்கச் சென்றாலும் பின்னுக்கும் முன்னுக்கும் நாய்குட்டிகள் போல் நாம் இழுபட்டுத்திரிந்த அந்தக் காலம். கடமை நேரங்கள் எங்களது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றிய சோதியாக்கா. நெல்லியடி ஈன்றெடுத்த புதல்வி. கல்வியும் கலையும் கற்றுத்தேர்ந்த உயர் கல்வி மாணவி.

விடியல் - அதுதான் எம்மை பட்டைதீட்டி வைரங்கள் ஆக்கிய பட்டறை. இல்லை பாசறை எம்மை வளர்த்த பாசத்தாய்ப்பூமி என்பேன்.
அந்த இனிய கணப்பொழுதுகள் யாவும் இனிமையும் இளமையும் நிறைந்தவை. எங்கள் கடமைகளை சரிவர நிறைவேற்ற எழுந்த நாட்கள்.

காடு - ஆம் காடு விரிந்து பரந்து எங்கும் வியாபித்திருந்தது. எப்பவும் ஒரு குளிர்மை பயம் தரும் அமைதி. குருவிகள் கூட எம்மைக்கண்ட பின் சத்தம் குறைத்தே கீச்சிட்டனவோ? என எண்ணத்தோன்றும் அமைதி. மென்குரல்களில் உரசிக்கொள்ளும் எம் உரையாடல்கள்.

எங்கும் தேடல். எதிலும் தேடல். காட்டில் உள்ள அனைத்து வனத்தையும் சிதைக்காமல் சிக்கனமாக முகாம் அமைத்தோம். சிங்காரித்துப் பார்த்தோம். போர் முறைக் கல்வியும் புதிய பயிற்சிகளும் தலைவர் அவர்களால் நேரடிப்பார்வையில் நிறைவேற்றிய காலம்.

சமையல் தொடக்கம் போர்ப்பயிற்சி வரையான பெண்களின் தனி நிர்வாகத் திறமை வளர்த்தெடுக்கப்பட்ட முதல் படியும் அங்கேதான். அதில் சிறப்பாக எல்லாப் போராளிகளாலும் கீழ்ப்படிவுடனும். அன்புடனும் நோக்கப்பட்ட ஒரே ஒரு தலைவி மேஜர் சோதியாக்கா.

உணவுத் தேவைக்காகவும் வேறுதேவைகள் கருதியும் மைல் கணக்கா. நாள் கணக்கா. அளவு தண்ணி. அளவு சாப்பாட்டுடன் நடை.. நடை... தொலை தூரம் வரை நடை. வானம் தெரியும் வெட்டைகளைக் கடக்கும்போது இரவு எம்முடன் கலந்து விடும். தொடுவானம் வரை தெரியும் நட்சத்திரங்கள் எமக்கு உற்சாகமூட்டும். காலைப் பனியும். உடலில் எமனைத்தின்ற களைப்பும் சேர்ந்திருக்கும். ஆனால் நொடிப்பொழுதில் கிசு கிசுத்து நாம் அடித்த பம்பலில் யாவும் தூசாகிப்போகும். அன்று எம்முடன் இருந்து குருவியுடன் பாடிய. மரத்துடன் பேசிய தோழியர் பலர் இன்றில்லை. நெஞ்சுகனத்தாலும் தொடர்கின்றேன்.

கனத்த இரவுகளிலும் நுளம்புக் கடியுடன் எப்பவுமே. ஏன் இப்பவுமே அது எங்களுடன் தொடர்கின்றது. சோதியாக்கா யார் யார் எப்படி எவ்விதம் கவனிக்க வேண்டும். அவர்கள் உடல்நிலை எப்படியென்று கவனித்துத் தந்த பிஸ்கற். குளுக்கோஸ் உணவாக மாறிவிடும் அங்கே. அவரது பரிவும். இரக்கமும் எம்மைக் கவனித்து அனுப்பும் விதமும் அம்மாவை ஞாபகமூட்டும்.

கண்டிப்பும் கறாரும் கொண்ட கட்டளையை அவர் தந்த போதெல்லாம் அப்பா ஞாபகம் வரும்.
கல கல என பஜார் அடித்து சிரித்த வேளை பள்ளித் தோழர்கள் நினைவில் வந்தனர்.

கள்ளம் செய்து விட்டு அவர்முன் போகும்போது கிறிஸ்தவ பாதிரியாரை ஞாபகம் ஊட்டும் சோதியாக்கா. அதுதான் எங்கள் சோதியாக்கா.
பச்சை சேட். பச்சை ஜீன்ஸ் அதுதான் அவரது விருப்பமான உடையும். ராசியான உடையும் கூட. பச்சை உடை போட்டால் நிச்சயமாகத் தெரியும் அண்ணையைச் சந்திக்கப் போறா என்று. அண்ணையிடம் பேச்சுவாங்காத உடுப்போ என்று யாரும் கேட்க. கொல் எனச் சிரித்தவர்களை கலைத்து குட்டும் விழும். அந்த குட்டுக்கள் இனி...

காட்டில் சகல வேலைகள். முகாம் அமைத்தல். கொம்பாசில் நகர்த்தல். கம்பால் பயிற்சி என ஆளுமையுடன் வளர்ந்து வந்தோம். யாவற்றையும் திட்டமிட்டு சகல போராளிகளையும் விளக்கிக் கொண்டு. அவர்களது ஆலோசனைகளையும் கேட்கும் பண்பும். வேலைகளைப் பங்கிடும் நிர்வாகத் திறனும். மனிதர்களை கையாளும் திறமையும் மிக்க தலைவியாக வளர்ந்து வந்தவர். மற்றவர்கள் ஒத்துப்போகும் விருப்பை எம்மில் வளர்த்துச் சென்றவர். உழைத்து உழைத்து தேய்ந்த நிலவு ஒரேயடியாக மறையும் என்று யார் கண்டார்.. எமக்கெல்லாம் நையிற்றிங் கேலான அவர் நோயால் அவதியுற்றபோது துடித்துப் போனோம்.

அந்த மணலாற்றின் மடியில் புதையுண்டு போக அவர் விரும்பியும் அன்னை. தந்தை காண உடல் சுமந்து நெல்லியடி சென்றோம். ஊர் கூடி அழுதது. ஊர் கூடி வணங்கியது. மரணச்சடங்கில் மத வேறுபாடின்றி போராளியின் வித்துடலை வணங்க பல்லாயிரம் மக்கள் கண் பூத்து அழுதபடி அஞ்சலித்த காட்சி. நாம் நிமிர்ந்தோம்.

வளர்வோம். நிமிர்வோம் என மீண்டும் புது வேகத்துடன் காடு வந்தோம். பின்னர் களத்தில் புகுந்து விளையாடிய வீராங்கனைகளையும் பெண் தளபதிகளின் நிமிர்வையும் கண்ட பின்பே ஆறினோம். சோதியாக்கா படை கொண்டு நடத்தும் அழகைப் பாருங்கள். நிர்வாகம் செய்யும் நேர்த்தியைப் பாருங்கள்.

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 10.12.2023 அன்று வெளியிடப்பட்டது.